குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] விபவ ஆண்டு ஆடித்திங்கள் 10 - 8 - 88 [இதழ்

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் சார்பில்
பாரதப் பிரதமர் மாண்புமிகு. ராஜீவ்காந்தி
தம்துணைவியார் திருமதி. சோனியாகாந்தியுடன்

வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு
விஜயம் செய்து வழிபாடு ஆற்றியபோது
ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி திருவுருவப்படம்
வழங்கப் பெற்ற காட்சி 5-8-88.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

தோன்றுபர மாநந்தச்
சோதியன்றி நின்னறிவில்
தோன்றுசுக முண்டென்றாய்
சுத்தப்பொய்-தோன்றுமின்பம்
ஈச னுயிரறிவ
தீதன்றி வேறுண்டேல்
பாசமலா தேதுண்டு பார்.

— முத்திநிச்சயம் 11

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 47 | 10-8-88 | இதழ் 9

உட்பொருள்

எண்		பக்கம்
1	பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம் ...	449
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	453
3	பாரதப் பிரதமரின் வைத்தீசுவரன்கோயில் வழிபாடு ...	458
4	Welcome Address Presented To Shri Rajiv Gandhi ...	461
5	திருவருள் ஒத்தாசை...	464
6	அபிராமி அந்தாதி ...	465
7	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	469
8	போதமும் சித்தியும் ...	474
9	அவனிகந்தர்வ ஈசுவரகிரகம் ...	478
10	சிறுத்தொண்டர் ...	484
11	செய்திகள் ...	488
12	சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரி	491
13	எதிர்காலம் .	493
14	பார்வையாளர் குறிப்பு 457, 460, 468, 477, 473.	
15	இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்-7. ...	497

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 8

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ ஆடி 10—8—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம்

சில கேள்விகள் :

நம் இந்தியத் திருநாடு, ஆங்கிலேயர் பிடியிலிருந்து விடுதலை பெற்று நாற்பத்தொரு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. நாற்பத்திரண்டாவது சுதந்திரதினத்தை மகிழ்வோடு கொண்டாட அரசும், மக்களும், அந்நாளை எதிர்பார்த்துக் காத்துள்ளனர். சுதந்திரம் பெற்று இரண்டு தலைமுறைகள் உருண்டோடியுள்ளன. 'சுதந்திரம்' என்பதன் உண்மையான பொருளை நாம் உணர்ந்துள்ளோமா? சுதந்திர நாட்டின் மக்களுக்குரிய கடமையும் - பொறுப்பும் இவை என நாம் அறிந்துள்ளோமா? நாற்பத்தொரு ஆண்டில் பெறவேண்டிய வளர்ச்சியை நாடு பெற்றுள்ளதா? இல்லை என்றால், நாம் செய்த தவறுகள் எவை? புதிய வேகத்தோடு, ஒரு சுதந்திரநாட்டை வழிநடத்திச்செல்ல, காலதாமதமாகவாவது, நாம் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை? கொண்டாட்டங்களுக்கு இடையே சற்றே நின்று தற்சோதனை செய்து பார்ப்போம்!

சுதந்திரம் என்றால்....?

'சுதந்திரம்' என்ற வடமொழிச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் 'விடுதலை' என்பதே. அகராதிகள் 'சுதந்திரம்' என்ற சொல்லுக்கு 'உரிமை' 'இட்டமான ஆளுகை' என்றெல்லாம் பொருள் விரிக்கின்றன. சொற்கள், காலம், இடம், தேவை முதலியன நோக்கிப் புதிய பொருள்களைப் பெறுவன. நம்மைப் பொறுத்தவரை 'சுதந்திரம்' என்பதை, ஆங்கிலேயரின் அடிமை விலங்கை ஒடித்து, அன்னியர் ஆட்சியிலிருந்து விடுபட்டதையே நாம் 'சுதந்திர'மாகக் கருதுகின்றோம். சுதந்திரம் என்பதற்கு உரிமை என்பது பொருளானால், உரிமை - கடமையோடு பிரிக்க இயலாதது என்பதை உணர்தல் வேண்டும். எனவே, சுதந்திரம் என்பது ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் மேற்கொண்டு ஒழுக வேண்டிய பொறுப்பினையே குறிப்பதாகிறது. 'மக்களிடம் பொறுப்பு உணர்ச்சி மங்கினால், சுதந்திர தீபம் மங்கிவிடும்' என்று உரைத்த அமரர் நேருஜியின் கருத்து, 'சுதந்திரம்' என்பது பொறுப் புணர்ச்சியே என்பதை - கடமை உணர்ச்சியே என்பதை உறுதி செய்கிறது.

முதலுக்கு ஆபத்து :

'சுதந்திரம் என்பது கட்டுப்பாடற்றுத் திரிவதற்கோ, விரும்பியதை விரும்பியவாறு செய்வதற்கோ வழங்கப் பெற்ற உரிமம் அன்று. பிறர் தூண்டுதலின்றிக் கட்டுப்பாட்டுடன் கடமை யாற்றுதற்குத் தரப்பட்ட அரியவாய்ப்பு' என்றார் ஆப்ரகாம்லிங்கன். ஒரு தொழிற்கூடத்தில் பணியாற்றும் ஒருவன், அங்குள்ள கட்டுப்பாடுகளை ஏற்க மறுத்து வெளியேறித் தாமே ஒரு தொழில் தொடங்குவதாகக் கொள்வோம். தொழில் தொடங்கியவன் சுயக் கட்டுப்பாட்டுடன், பொறுப்போடு செயற்படும் கடமையை மறந்தால் மூலதனம் பாழாகி விடாதா? அன்னியர் கட்டினை அறுத்தெறிந்த நாம், சுயக்கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொண்டு, பொறுப்போடு செயற்படாவிட்டால், முன்னோர் பெற்றுத் தந்த 'ஜனநாயகம்' என்ற முதலை இழந்து விட நேரிடும் என்பதை ஞானசம்பந்தம் அன்போடு எச்சரிக்கிறது. சூரியன் எப்படிக் காலந்தவறாமல் கடமை ஆற்றுகின்றானோ அதுபோல் சுதந்திரம் விரும்புகிற நாமும் காலந் தவறாமல் கடமையாற்ற வேண்டும். அப்போதுதான் நாடு செழிப்படையும், நாமும் வளமுற வாழ்வோம்.

முதல் இருபது ஆண்டுகள் :

சுதந்திரத்தின் அர்த்தமும், பயன்பாடும் தெரியாதவர்களா இந்தியர்கள்? இல்லை! சுதந்திரம் பெற்ற ஏறத்தாழ முதல் இருபது ஆண்டுகளில் வாழ்ந்திருந்த ஆட்சியாளர்களும், அரசியல்வாதி

களும், பொதுமக்களும் சுதந்திரத்தை முழுமையாகவே உணர்ந்திருந்தனர். 'உழுதவனுக்கே விளைவின் பெருமை தெரியும்' 'வெயிலில் நின்றவனுக்கே நிழல் அருமை புரியும்' என்பார்கள்.

> " தண்ணீர் விட்டா வளர்த்தோம்; சர்வேசா இப்பயிரைக்
> கண்ணீரால் காத்தோம்! கருகத் திருவுளமோ "

என்ற பாரதியின் நெஞ்சக் குமுறலை உணர்ந்திருந்த விடுதலைப் போராட்டத் தியாகத் தழும்பேறியவர்கள், சுதந்திரத்தை - அதன் உண்மைப் பொருள் உணர்ந்தே பேணி நின்றனர். அடுத்த தலைமுறையில் எல்லாம் தாழ்வுற்று, வறுமைமிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டது. கெட்டுக் கொண்டே வருகிறது.

ஒருவனே சுதந்திரன் :

இறைவனைத் தவிர முழு சுதந்திரம் உடையார் எவரும் இலர். தன்னை நியமிப்பார் இன்றி, எவன் ஒருவன் தன்கடமைகளைச் சிறிதும் குறைவின்றி, உரியகாலத்தில் நிறைவேற்றுகின்ருனே அவனே முழுமையான சுதந்திரம் உடையவன். இறைவனை இது பற்றியே பரிபூரணன் என்று முன்னோர் குறித்தனர். மகாகவி பாரதியார், 'ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே' என்று தொடங்கி,

> பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம் — பரி
> பூரணனுக் கே அடிமை செய்து வாழ்வோம்!

என்று நிறைவிப்பதில் இறைவனே பரிபூரணன் என்ற குறிப்புப் புலப்படக் காணலாம். மனிதனுக்குமனிதன் அடிமையாகாவிடினும், அறம், ஒழுக்கம், கடமை முதலிய உயர்ந்த கடவுட் பண்புகளுக்கு என்றுமே அவன் கட்டுப்படுதல்வேண்டும். அரசியல் அமைப்புக்கும், சட்ட வரம்புகளுக்கும் கட்டுப்பட்டுக் கடமையாற்ற நாம் தவறிய போதே சுதந்திரப்பயிரில் வாட்டம்காணத் தலைப்பட்டது. இன்று அது, மேலும் மேலும் வளர்ந்து நம்மை இழிநிலைக்குக் கொண்டு செல்கிறது.

பின் இருபது ஆண்டுகள் :

தேசிய நாட்டமும், தியாக உணர்வும் இல்லாத அரசியல்வாதிகளும், கடமை நாட்டமும், பொறுப்பு உணர்வும் இல்லாத ஆட்சியாளர்களும், பொதுமக்களும் கடந்த இருபது ஆண்டுகளில் சுதந்திர விருட்சத்தின் வேரில் வெந்நீரை ஊற்றி வருகின்றனர். தேசிய அளவில் நாடு காத்த வீர வரலாறு கொண்ட சீக்கியர்கள் பெரும் போராட்டத்தை நடத்துகின்றனர். பிரிவினைவாத வெறிக்கு இந்நாட்டின் பிரதமர் ஒருவர் உயிர்பலியாயிற்று. மதம், சாதி, ஆறுகள், நாட்டுஎல்லை, இனம், மொழி என்ற பெயரில் இந்திய தேசிய ஒருமைப்பாடு ஆட்டம் கண்டு நிற்கிறது. மாநில அளவில் இன்று

சாதிப்போராட்டங்கள் பூதாகரமாக எழுந்து நிற்கின்றன. ஆதி திராவிடர், வன்னியர், முக்குலத்தோர் எனச் சாதீயவழியில் மாநிலமும் பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்கி நிற்கிறது. தேசிய அளவிலும், மாநில அளவிலும் இன்று காணப்படும் பதட்டங்களைக் குறுகிய அரசியல் ஆதாயங்களுக்காகத் திட்டமிட்டு உருவாக்கியவர்கள் அரசியல்வாதிகளே! அவர்கள் கிளப்பிவிட்ட பூதங்கள், இன்று அவர்களுக்கே அச்சுறுத்தல்களாக மாறி நிற்கின்றன.

சிங்கத்திடமிருந்து தப்பி....?

சிங்கத்திடமிருந்து தப்பி வந்து புலியிடம் சிக்கிக் கொண்ட கதை போல், அந்நியரிடமிருந்து விடுபட்டநாடு, குறுகிய உள்நாட்டுப் பிரச்சனைகளில் சிக்குண்டு தவிக்கிறது. அடிப்படை வசதிகளான உணவு, இருப்பிடம், குடிநீர், மருத்துவம் முதலியன இன்னும் முழுமையாக மக்களுக்குக் கிடைத்திடவில்லை. அரசின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி, அரசின் அணுகுமுறை சரியின்மையாலும், மக்களின் உரிய ஒத்துழைப்பின்மையாலும் தாமதப்படுகிறது. என்நாடு, என்மக்கள் என்ற எண்ணம் தேய்ந்து, தன்வீடு, தன்மக்கள் என்ற குறுகிய எண்ணம் விரிந்து பரந்து விட்டதைக் காண்கின்றோம்.

உறுதி பூண்போம் :

இந்திய மக்கள் தங்கள் குறுகிய எண்ணப்போக்கை மாற்றிக் கொண்டால், நமது சுதந்திரப் பயிர் மேலும் வளமை பெற்றே தீரும். ஒவ்வொரு தனிமனிதனும், சுதந்திரத்தை, நாட்டை முன்னேற்றுவதற்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகக் கருத வேண்டும். குறுகிய எல்லை, சமய - சாதிய எல்லைகளைத் தகர்த்தெறிய முன் வரவேண்டும். கட்டுப்பாட்டுடனும், அளவற்ற பொறுப்புணர்ச்சியோடும் அரசோடுஒத்துழைக்க முன்வரவேண்டும்.

> " ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பினர்
> வாராது போல்வந்த மாமணி "

யாகிய சுதந்திர தீபத்தை அணையாது தியாக நெய்யூற்றி ஒளி மிளிரச் செய்யவேண்டும். சுதந்திரத் திருநாளில் பொறுப்புணர்ச்சியோடு கடமையாற்ற அனைவரும் உறுதி பூணுதல்வேண்டும். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல் நம் அனைவரின் தலையாய கடமை. சுதந்திரம் என்பதுஉரிமை, அவ்வுரிமை நம் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமானால் நாம் அனைவரும் கடமை தவறாது செயல்படுவோமாக. பொறுப்புணர்வோடு பணிபுரிவோமாக.

வாழ்க சுதந்திரம்! வளர்க நம் கடமை!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தமிழ்ப் பல்கலைக்கழகமும்,

பாரதிதாசன் பல்கலைக்கழகமும் இணைந்து

திருச்சிராப்பள்ளி ஜமால்முகமது கல்லூரியில் நடத்திய

அனைத்திந்திய தமிழ் இலக்கியக் கழகத்தின் இரண்டாவது கருத்தரங்கிற்கு

எழுந்தருளி வழங்கியருளிய

ஆசியுரை

8—6—1988

" நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே "

— திருஞானசம்பந்தர்

தென்கயிலாயம் :

திருச்சிராப்பள்ளி என்னும் இத்தலம், திரிசிரபுரம் என்னும் பெயரை உடையது. இதுகுறித்த பழைய வரலாறு ஒன்றுண்டு: முன்னொரு காலத்தில் ஆதிசேடனும் வாயுதேவனும் தமக்குள் ஒருவரை ஒருவர் வலிமையிற் சிறந்தார் யார்? என்று போட்டி போட்டுக் கொண்டனர். பின்னர் இது குறித்து அவர்களே ஒருமுடிவும் கண்டனர். ஒருவர், இமயப்பகுதியில் உள்ள திருக்கயிலை மலையை இறுகப் பிடித்துக்கொள்வது என்றும் மற்றொருவர் அதனைப் பெயர்த்து விடுவது என்றும் முடிவு செய்தனர். அவ்வகையில் ஆதிசேடன் தம் ஐந்து தலைகளினாலும் வாலினாலும்

மலையைச்சுற்றி இறுகப்பற்றிப் பிடித்துக்கொண்டான்; வாயு பகவான் தம்வலிமை முழுவதையும் பயன்படுத்திச் சூறைக்காற்றால் திருக்கயிலை மலையின் மூன்றிடங்களைப் பெயர்த்து மூன்றிடங்களில் விழுமாறு செய்தார். அவை விழுந்த இடங்களே திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திருக்கோணமலை என்பன. இவை தென் கயிலாயம் என்றழைக்கப் பெறுவன.

திரிசிரபுரம் :

இம்மூன்று இடங்களின் பெயர்களும் திரிகாளத்தி, திரிகோண மலை, திரிசிரபுரம் என்றிருத்தல் வேண்டும் என்றும் அதற்கேற்ப அவ்வவ்விடங்களில் காணும் மலைகளின் அமைப்புக்களும் மூன்று பகுதிகளாக உள்ளன என்றும் துணிய இடமுண்டு. குறிப்பாக இந்தத் திரிசிரபுரம் எனப்பெறும் இம்மலையின் அமைப்பு, மூன்று பகுதிகளாகத் திருக்கயிலை மலையைப் போன்றே உள்ளமையை உணரலாம். கீழே உள்ள பகுதி, நடுவிலுள்ள பகுதி, உச்சிமலைப் பகுதி என்று மூன்று பகுதிகளாக இது அமைந்திருக்கிறது. கீழே உள்ள பகுதியில் அருள்மிகு மட்டுவார்குழல் அம்மையும், நடுப் பகுதியில் அருள்மிகு தாயுமானவரும், உச்சியில் உச்சிப் பிள்ளையாரும் அருட்காட்சி வழங்குகின்றனர். மேல் உச்சியில் இறைவன் இருக்கவேண்டும் எனினும் விநாயகரும் சிவபெருமானும் வேறுவேறு அல்லர் என்னும் குறிப்பில் இதனைக் கொள்கிறோம். இமயமலை, சிறிய இமயம், பெரியஇமயம், எல்லைகடந்த இமயம் என மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. சிறிய இமயத்தில் கேதாரம் முதலிய தலங்களும், பெரிய இமயத்தில் அமரநாதம் முதலிய தலங் களும், எல்லைகடந்த இமயத்தில் திருக்கயிலாயத் தலமும் அமைந் துள்ளன. கயிலைமலை மூன்று பகுதியாக இருப்பது போலவே இங்குள்ள மூன்று தலங்களும் மூன்று பகுதிகளாக உள்ளன என்பதை அவ்வப் பெயர்களே அறிவிக்கின்றன. மேலும் இத் திருச்சிராப்பள்ளி மலை முப்பகுதியாக உள்ளதை இன்றும் காணலாம்.

வரலாற்றுக் குறிப்பு :

இத்தலத்திற்கு இங்ஙனம் உள்ள புராணச்செய்தியோடு மேலும் ஒருபுராணச்செய்தியும் உண்டு. திரிசிரன் என்னும் அசுரன் பூசித்துப் பேறு பெற்றமையால் திரிசிரபுரம் என்னும் பெயர் பெற்றது என்பதே அது. இன்னுமொரு வரலாற்றுக் கருத்தும் நிலவு கிறது. 'சிரா' என்னும் பெயரை உடைய சமணமுனிவரின் பள்ளியை உடையதாய் இது விளங்கியதாதலின், 'சிராப்பள்ளி' எனப் பெயர்

பெற்றது என்றும், அப்பரடிகளால் சைவத்திற்கு வந்த மகேந்திர வர்மப்பல்லவன் இப்பள்ளியை இடித்துச் சிவன்கோயில் கட்டினன் என்றும் வரலாற்றாசிரியர்கள் குறிக்கின்றனர். பொதுவாகப் 'பள்ளி' என்று முடியும் இடங்கள் ஒருகாலத்தில் சமணர்களின் இருக்கையாக இருந்திருக்க வேண்டும் என்று எண்ண இடமுண்டு. இவைபற்றியெல்லாம் இவ்விலக்கியக் கழகத்தினர் நடுநிலை நின்று ஆய்வு செய்து உண்மை காணுதல் தமிழிலக்கியத்திற்கும் வரலாற்றிற்கும் தமிழ்நாட்டிற்கும் செய்யும் பெரும் பணியாகக் கொள்ளப் பெறும்.

சுதந்திர நாடு :

இத்தகைய புராணச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இத்தலத்தில் இன்று அறிஞர்கள் பலர் கூடி ஒரு இலக்கியக் கருத்தரங்கு நிகழ்த்துவது மகிழ்ச்சிக்குரியது. இதில் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் பலர் கலந்து கொண்டுள்ளீர்கள். இவ்விடத்தில் நம் நாட்டின் நிலைகுறித்தும் சிறிது சிந்திப்பதும் பொருத்தமாகும்.

இந்த நாடு சுதந்திரம் அடைந்து 41 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனினும் மக்கள் மத்தியில் அன்றாடம் ஒருநிலைப்படாத பதட்டமான வாழ்க்கையே காணப்படுகிறது. இந்நிலை ஏன்? என்று சிந்திக்க வேண்டும். மதம், மொழி, இனம், அரசியல் என்பன மக்களை ஒன்று படுத்தும் நிலைக்குப்பதிலாக அவையே வேறுபடுத்தும் கருவிகளாக மாறிய நிலைமிகுதியும் கவலைதருகிறது. இந்நிலைமாற ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்களின் பங்கைப் பற்றியும் சிந்திப்பது பொருத்தமாகும்.

ஆசிரியர்கள் கடமை :

இன்று நாட்டில் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் அதிகமாகச் செல்வாக்கு உடையவர்களாகத் திகழ்கின்றனர். பேச்சாலும் எழுத்தாலும் மக்களைக் கவரும் தகுதி படைத்த அவர்கள் அத் தகுதியினை நன்னெறிக்கு உபயோகிக்க வேண்டும். அதிலும் ஆசிரியர்கள் மாணவர்களை இளம் பிராயம் தொடங்கியே நெறிப் படுத்தும் பொறுப்புடையவர்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. மாதா, பிதா, குரு ஆகிய மூவரும் தெய்வத்திற்கு ஒப்பானவர்கள் என்பது ஒரு பொருள். மேலும் மாதா பிதாவைக் காட்ட, பிதா நல்ல ஆசிரியரைக் காட்ட, அவ் வாசிரியர் தெய்வத்தைக் காட்டுவர் என்பது மற்றொருபொருள், அதனால்தான் முடிநிலைப் பயனாகிய தெய்வத்தை அடைய வழிகாட்டும் குருவைத் தெய்வமாகவே முன்னோர்கள் கருதிப்

போற்றினர். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்றனர். இத்தகைய நம்பிக்கைக்கும் பொறுப்பிற்கும் உரிய ஆசிரியர்கள் தங்களின் கடமையை உணர்ந்து, நாடு முன்னேறச் செயற்பட வேண்டுவது இன்றியமையாதது என்பதை ஆசிரியர்கள் கூடியுள்ள இச்சபையில் அறிவிக்கவேண்டுவது நமது கடமையாகிறது.

திதி தேதியானது :

அதுமட்டுமின்றி, முன்னோர்கள் காத்து வந்த நம்பிக்கைகளை, மரபுகளை, பழக்கவழக்கங்களை ஆய்ந்து உண்மை காணாது மறுப்பது, இன்று பலரிடையே காணப்படுகிறது. இது தவறு. எதனையும் உள்ளபடி ஆய்ந்து முடிவு செய்தலே தக்கது. இதனையும் ஆசிரியர்கள் மக்களுக்கு எடுத்துக் கூறுதல் அவசியம். எடுத்துக் காட்டாக நாள், மாதம், ஆண்டு என்று முன்னோர்கள் பிரித்து வகுத்துள்ள காலப்பகுப்பில் சிறந்ததோர் உண்மை இருக்கிறது. ஒவ்வொன்றும் இரண்டு தன்மைகளைக் கொண்டது. நாள் என்பது, பகலும் இரவும் கொண்டது; வெம்மையும் தண்மையும் அவற்றின் இருதன்மைகள். அதேபோன்று மாதம் என்பது சுக்கிலபட்சம், கிருஷ்ணபட்சம் எனப்படுகிறது; வெம்மை தண்மையொடு ஒளி மிகுந்த காலம், ஒளி குறைந்த காலம் எனப் பிரிக்கலாம்; ஆண்டு என்பது தட்சணாயனம் உத்திராயனம் எனப்படுகிறது; இவற்றிலும் வெம்மை மிகுதி தண்மை மிகுதியுடன் ஒளிமிக்கும் இருள்மிக்கும் உள்ள இருதன்மைகளைக் காணலாம். மேலும் வெம்மையில் ஒளியும், தண்மையில் இருளும் மிக்கிருப்பதைக் காணலாம். வெம்மைப்பகுதி ஆணாக - சிவமாகவும், தண்மைப்பகுதி பெண்ணாக - சக்தியாகவும் இருப்பதைத் தெளியலாம். மேலும் நாள் என்பதே இன்று தேதி என அழைக்கப் பெறுகிறது. பழமையில் திதி என்ற சொல்லே இன்று தேதி என மருவி வழங்குகிறது. இன்று பிரதமை என்றால் முதல் நாள் என்று பொருள். ஒன்று, இரண்டு, மூன்று என்னும் பொருளுடைய சொற்களே பிரதமை, துவிதியை, திருதியை என்ற எண்ணுப் பெயரில் திதி எனக் குறிக்கப் பெறுகின்றன. இன்று என்ன திதி என்றால் பஞ்சமி என்பர்; அதாவது ஐந்தாவது நாள் என்பது பொருள். திதி என்பது இங்ஙனம் தேதி என்றாயிற்று. இன்று, பலர் என்ன திதி என்று கேட்காமல் என்ன தேதி என்று கேட்கின்றனர். இத்திதி பதினைந்து நாட்களுக்குத் தொடர்ந்து வந்து பதினைந்தாம் நாள் அமாவாசை அல்லது பருவம் என வரும். இரவும் பகலும் சேர்ந்தது ஒருநாள், இரவு அம்மை வடிவம். பகல் அப்பன் - சிவன் வடிவம். அம்மை அப்பர் இருவரும் ஒருவரே; இருவரல்லர். சுக்லபக்ஷம் - வளர்பிறை-சிவம்; கிருஷ்ணபக்ஷம் - தேய்பிறை-சக்தி;

இருபக்ஷமும் சேர்ந்ததே ஒருமாதம். உத்தராயனம்; தைமாத முதல் ஆனிமாதம் முடிய ஆறுமாத அளவுடையன. இக்காலம் சிவம்; ஆடிமுதல், மார்கழி வரையுள்ள காலம் தக்ஷிணாயனம். இது சக்தி; இருஅயனமும் சேர்ந்ததே ஓராண்டு. அதுபோல் சிவமும சக்தியும் சேர்ந்ததே கடவுள். அல்லது இறைவன் என்று கொள்ளப்படுகிறது. காலம் வெம்மை தண்மையாகிய இரண்டிரண்டு தன்மைப்பட்டு நம்மை வளர்ப்பது போலவே இறைவனும் காலத்தாலும் இடத்தாலும் இரண்டிரண்டு தன்மைப்பட்டு நம்மை வளர்த்து வருகிறான். இத்தத்துவங்களை மக்கட்கு ஒல்லும் வகையெலாம் அறிவிப்பதும் தமிழிலக்கியப் பேராசிரியர்களின் கடமை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறோம்.

இவைபோன்ற விஞ்ஞானத் தத்துவ விளக்கங்களை நுணுகி ஆராய்ந்து உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறவேண்டுவது ஆசிரியர்களின், குறிப்பாக ஆய்வாளர்களின் கடனாகும்.

வாழ்த்து :

இன்று இங்கு நடைபெறும் அனைத்திந்திய தமிழ் இலக்கியக் கழகத்தின் இரண்டாவது கருத்தரங்கு நல்ல ஆய்வுச்செய்திகளை உலகுக்குத் தந்து சிறக்கவும் இக்கருத்தரங்கில் பங்குபெறும் ஆய்வாளர்களும் இருபெரும் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களும எல்லா நலன்களும பெற்று நீடுவாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

ஆய்வுணர்வு வளர்க! அருங்கருத்து மலர்க!

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakadeswarar Devasthanam, Thirukkadaivur.

With the blessing of Maha Sanidanam, I have the pleasure of worshipping the Lord Siva, and Abirami Amman. The Temple Assistants are very much instresting to have Tharsan. The Temple has been kept very neat. While staying here I forget the worries and moment, I pray the Almighty to give prosperous life and wealth to all over this world.

(S-d) N. Govindarajalu

16—4—88 Chief Judicial Magistrate, Coimbatore.

பாரதப் பிரதமரின்
வைத்தீசுவரன்கோயில் வழிபாடு

வண்ண வண்ண மலர்களால் வேயப்பட்ட பூப்பந்தல் நறுமணம் வீசிற்று! கண்ணைக் குளிர்வித்தது! தரை, கம்பள விரிப்பில் செம்மாந்திருந்தது! தருமை ஆதீனத்தின் சார்பில் வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள், ஆதீனப் பணியாளர்கள், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் பிரமுகர்கள் பிரதமரின் வருகையை எதிர்நோக்கி இருந்தார்கள். நாதசுரம், மங்கள இன்னிசை முழங்கிக் கொண்டிருந்தது! சிவாசாரியர்கள் பூரணகும்பத்துடன் பிரதமரை வரவேற்க நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதை அறிந்து ஆயத்தமாக இருந்தார்கள்.

பிரதமரின் சுற்றுப்பயணத் திட்டத்தில் வைத்தீசுவரன் கோயில் ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான் திருக்கோயில் வழிபாடு இடம் பெற்றிருந்தது. அன்று 5—8—88 வெள்ளிக்கிழமை. பிரதமர் தம் துணைவியார் திருமதி. சோனியாகாந்தியுடன் பயணத் திட்டப்படி, திருக்கோயிலை வழிபட விஜயம் செய்தார். காலை 9-30 அளவில் மேளதாளங்கள் முழங்கின. தருமை ஆதீனத்தின் சார்பாக வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மணம்மிக்க ஐவ்வாதுமாலை அணிவித்து வரவேற்றார். அறநிலையத் துறை ஆணையர் திரு. இரா. கல்யாணசுந்தரம் அவர்கள் இலாகா சார்பில் மாலை அணிவித்துச் சிறப்பித்தார். மயிலாடுதுறை அறநிலையத்துறை துணைஆணையர் திரு. வாசகப்பெருமாள், திருக்கோயில் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் உடன்இருந்தனர். சிவாசாரியர்கள் ஆதீனச் சார்பிலும், திருக்கோயில் சார்பிலும் பூரணகும்ப மரியாதை அளித்துத் திருநீற்றுப்பிரசாதம் வழங்கினர். பிரதமர், திருக்கோயில் வாயிலில் நிறுத்தி வைக்கப்பெற்றிருந்த யானைக்குக் கரும்பு அளித்து மகிழ்வோடு திருக்கோயிலுக்குச் சென்றார். வேம்படியைச் சுற்றி வந்தார். ஆதீனச் சார்பில் அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு. தி. நா. இராமச்சந்திரன் தலவிருட்சச் சிறப்புக்களைக் கூறினார். பிரதமருடன் திருக்கோயில் சென்று திருக்கோயில் சந்நிதிகள், திருக்குளம், வாகனமண்டபம் முதலிய பல பகுதிகள் பற்றி ஆங்கிலத்தில் விளக்கம் அளித்தார்.

பிரதமர் சித்தாமிர்த தீர்த்தத்திற்குச் சென்று நீர்தெளித்துக் கொண்டு, திருக்குளத்தோற்றம் - தூய்மையான பராமரிப்புக் கண்டு மகிழ்ந்தார். வள்ளி தெய்வயானையுடன் கூடிய முருகப் பெருமானின் சுதைச்சிற்பம் அவர்கருத்தைக் கவர்ந்தது, பிரதம ருக்கு இச்சிற்பம் பற்றி விளக்கம் கூறப்பட்டது. விநாயகப் பெருமான் சந்நிதிக்கு வந்த பிரதமர், தம் பெயர், துணைவியார் பெயர், நட்சத்திரம் முதலியன கூறி, சங்கல்பம் செய்து கொண்டார். அருச்சனை நடைபெற்றுப் பிரசாதம் வழங்கப் பெற்றது. அடுத்து வாகன மண்டபத்தில் வாகனங்கள் பற்றி விளக்கம் கூறப்பட்டது. கவனமாகக் கேட்டு வாகனங்களைக் கண்ணுற்றார். சுவாமி சந்நிதியில் அருச்சனை நடைபெற்றது பிரதமர் அருச்சனை நிகழ்ந்த சந்நிதிகளிலெல்லாம் நாம நட்சத்திரம் கூறி, சங்கல்பம் செய்துகொண்டமை குறிப்பிடத் தக்கது. சுவாமி சந்நிதியில் தருமை ஆதீனம் தேவாரபாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஆர். வேலாயுத ஓதுவா மூர்த்திகள், மற்றும் திருமுறை இசைவாணர்கள், தேவாரப் பாடசாலை மாணவர்கள் திருமுறை இன்னிசை நிகழ்த்தினர். தருமபுரம் மாலைநேரத் தேவாரப்பண்ணிசைவகுப்பில் பயிலும் மாணவிகளும் தேவாரம் ஓதினர். பிரதமரும் அவர் தம் துணைவியாரும் அருகிற் சென்று சிரத்தையுடன் திருமுறை இசைகேட்டு மகிழ்ந்தனர்.

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி, ஸ்ரீ அங்காரகர் சந்நிதி வழிபாடு முடிந்தபின் ஸ்ரீ தையல்நாயகி அம்மை வழிபாடு நிகழ்ந்தது. அம்பாள் சந்நிதியில் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருட்பரிசாக - நாடு, பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க வாழவும்-ஆட்சி சிறக்கவும் ஆசிகவசமாக - அம்பாள் முன் வைக்கப்பெற்றுப் பூசிக்கப்பெற்ற வெள்ளிச் செங்கோல் பிரதமருக்குப் பொன்னுடை போர்த்தி, வழங்கப்பெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமான் திருவுருவப் படமும் பிரசாதமும் உடன் வழங்கப்பெற்றன.

பின்னர்க் கொடி மரத்தின் அருகே பட்டுக் கம்பளம் விரித்துத் திருக்கோயில் மரியாதை செய்து பிரசாதம் வழங்கப்பெற்றது. மாண்புமிக்க பிரதமரும் அவர் தம் துணைவியாரும் உடன் அமர்ந்த னர். பிரதமருக்கு மாலை அணிவிக்கப்பட்டது. பிரதமரிடம் அளிக்கப்பட்ட மற்றொருமாலை பிரதமரால் திருமதி சோனியா காந்திக்கு அணிவிக்கப்பெற்றது. திருமணக்கோலம் போன்ற இக் காட்சியை அடுத்துப் பிரசாதம் அணிந்து மகிழ்ந்தனர். அறநிலையத்துறை சார்பில் ஆணையரும் மாலை அணிவித்தார். தருமை ஆதீனத்தின் சார்பில் வரவேற்பு மடல் அளிக்கப்பெற்றது.

(இவ்விதழில் அஃது இடம் பெற்றுள்ளது.) பிரதமருடன் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஜி. கருப்பையமூப்பனார், மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் முதலியோரும் வந்திருந்தனர் இவர்கள் பிரதமருக்கு வழிபாட்டில் துணை நின்று, வழிபாட்டு நெறிமுறை விளக்கங்கள் அளித்தனர். இவர்கள் இருவருக்கும் ஆதீனச் சார்பில் மாலை அணிவிக்கப் பெற்றுப் பிரசாதம் வழங்கப் பெற்றது. பிரதமர், சிவாசாரிய சம்பாவனை செய்தார்.

அடுத்து இளநீர் பருகித் தாகசாந்தி செய்துகொண்டு அறுமுகப் பெருமானைத் தரிசித்தார். திருக்கோயில் திருவாயிலை அடைந்து, தம் மனநிறைவைப் புலப்படுத்தும் வகையில் வணக்கம் செலுத்தித் தம் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்தார்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தருமை ஆதீனத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பளித்து கௌரவிப்பதற்கும் பாதுகாப்புக்கும் என விரிவான ஏற்பாடு களைச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

— வித்துவான் கா. ம. கண்ணப்பன்.

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ கம்பகரேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

பார்வையாளர் குறிப்பு நகல்

இன்று இந்த அருள்மிகு சரபேஸ்வரர் ஆலயத்திற்கு வந்து ஆண்டவனைத் தரிசிப்பதில் பேரின்பம் அடைந்தேன். கோவில் தோற்றம் பிரகாரம், பராமரிப்பு இவைகளைக் கண்டு உளம் மகிழ்ந்தேன். ஆண்டவனின் தரிசனம் செய்ய திரு. ராஜா முதலியார் காட்டிய பரிவும் கோவிலைப் பராமரிக்கும் தன்மையும் கோவிலின் புனிதமும் வியக்கத்தக்க வகையில் உள்ளது. இந்தக் கோவில் வரவேற்பு, முறை பூஜை முறை இவை யாவும் பாராட்டத் தக்க முறையில் உள்ளன. இங்குப் பணிபுரியும் பணியாளர்கள் பக்தர்களுக்கு மிகவும் பணிவாகவும் வழிகாட்டியாகவும் உள்ளனர்.

(ஒ-ம்) திரு. ஆர். ராமமூர்த்தி
டிப்டி கலெக்டர்,
அசிஸ்டெண்ட் செட்டில்மெண்ட் ஆபீசர்,
தஞ்சாவூர்.

12—8—88

GURUPADHAM

DHARMAPURA ADHINAM

WELCOME ADDRESS PRESENTED TO

SHRI RAJIV GANDHI,

THE PRIME MINISTER OF INDIA,

During Darshan At Vaidheeswarankoil Of Sri Vaidhyanathaswamy Devasthanam.

I. Swagatham

Sri-La-Sri Shanmuga Desika Gnanasambanda Paramacharya Swamigal, the 26th Gurumaha Sannidanam of Dharmapura Adhinam and Hereditary Trustee of Sri Vaidhyanathaswamy Temple, Vaidheeswarankoil, extends a warm welcome to the revered Prime Minister Shri Rajiv Gandhi and his consort Srimathi Sonia Gandhi.

II. The Grand Lineage

Pandit Nehru was a RUBY; Indira Gandhi was an EMERALD; You sir, our beloved Prime Minister, are a DIAMOND.

III. Our Temple

The presiding deity of the temple at Vaidheeswarankoil is BHAVAROGA SHRI VAIDHYANATHA and the Sthala Vriksham is the NEEM Tree. 'Bhava' means birth; 'Roga' means disease. So, Bhavaroga Vaidhyanatha is the doctor who cures all diseases of men and enables them to attain salvation. The Temple-tree which is Neem is endowed with medicinal qualities for effecting such cures. The Sakthi of the Temple is known as THAIYALNAYAKI. Another important deity of

this temple is SHRI SELVAMUTHUKUMARASWAMY, the son of the divine couple, and there are also three other important deities.

IV. Temple-Service

The Veda-Agama-Thirumandiram states: "If the pooja services are not properly done in the temples and if the religious institutions are not properly administered there will be civil war, commotion, riot, pest and pestilence." The regulartity of the temple-service, it can be seen, guarantees the welfare of the nation.

V. The Dictum Of Pandit Nehru

Pandit Nehru had expressed more than once that Tamil Nadu was the abode of peace and harmony. It was so because of its people who visited their temples in great multitudes regularly. To ward off calamities and to usher in peace and harmony the regularity of the pooja-services in the temple should be assured. Religious institutions should be maintained with due care. These could be achieved by entrusting the administration of the Temples and Religious Institutions to autonomous bodies which could be effectively supervised by the Government. The financial burden of such bodies should be lessened. Steps should be taken to improve their financial condition.

VI. State Legislature Affecting Religious Institutions

Most of the renowned Religious Institutions of Tamil Nadu are maintained from out of the income of the agricultural lands. The State enactments have, wittingly or unwittingly, upset the established relationship between landowners and tenants. The income of the temples and the religious institutions has dwindled. Steps have to be taken to improve the lot of the temples and the religious institutions.

VII. Cauvery Water

The Cauvery, a perennial river, presents to-day a disquieting appearance. The entire future of the Tamil Nadu rests on this river and its capacity for irrigation. During the regime of the Congress in the Tamil Nadu, this river was not a source of problem at all. Now the situation is different, distressingly different. We appeal to you Sir, to hasten to restore to us our 'old Cauvery'.

VIII. Conclusion

The people of Tamil Nadu are very happy that the Prime Minister's visit to this holy temple synchronises with the Adi Pooram Festival which symbolises Victory. The Prime Minister is assured of success in all his great and noble undertakings. The triumph of the Prime Minister is the triumph of his people.

IX. Benediction

The 26th Pontiff of the Dharmapura Adhinam invokes Karpaga Ganesa, Selvamuthu Subramaniya and Thaiyalnayaki-sameda-Sri Vaidhyanathaswamy to shower their choicest benedictions on our beloved Prime Minister, his family and his cabinet. We present to you a sceptre to continue to rule the nation in the righteous way.

By the mandate of His Holiness
Vidwan
Ramalinga Thambiran.

Vaidheeswarankoil,
12–8–1988.

திருவருள் ஒத்தாசை

நெல்லை சிவமணி,
புலவர் திரு. ம. சிவசம்பு, எம். ஏ.,
பாளையங்கோட்டை.

நண்பர் ஒருவர் திருச்செந்தூர் முருகனுக்குச் சிறப்பு அபிடேகம் வழிபாடுகள் செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்திருந் தார். குடும்பத்தில் ஏதோ ஒரு தடை. கோவிலுக்குள் சென்று வழிபட முடியாதநிலை; வருந்தினார். 'எடுத்து வைத்தாலும் கொடுத்து வைக்கவேண்டும்' என்றார் ஒரு நண்பர். இச்சொல் அந்நண்பர்க்கு மேலும் வருத்தத்தைக்கொடுத்தது. அந்நண்பர்க்கு ஆறுதல் சொல்லுவது எப்படி என்று சிந்தித்தபோது சொக்கநாத வெண்பா கை கொடுத்தது.

'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்பது திருவாசகம். திருவருள் ஒத்தாசை இன்றி எச்செயலும் நடைபெறாது. சொக்கநாதப் பெருமானிடம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் கேட்கும் அழகைப் பாருங்களேன்!

சொக்கநாதப் பெருமானே! எனக்குமுன் அளவற்ற ஆன்மாக் களுக்கு உன் அருளால் முத்திப்பேறு கொடுத்துள்ளாய். முன்பு முத்தி பெற்றவர்கள் அதற்குரிய தகுதிகளையும் பக்குவத்தையும் பெற்றிருந்தார்கள் என்று சொல்லலாம். அதுவும் உன் திருவருள் துணை தானே! உன் திருவருள் துணையின்றி யாரேனும் தகுதி பெற்றவர் உண்டோ? அத்திருவருள் என்னைப் பொருத்தமட்டில் சும்மா இருத்தற்குக் காரணம் யாது? என்றல்லவா கேட்கிறார்.

> " முன் அளவில் மாக்களுக்கு முத்தி கொடுத்த அருள்
> என் அளவில் சும்மா இருப்பதேன் — முன் அளவில்
> சீர் பெற்றா ரேல்உன் திருவருளொத் தாசையின்றி
> ஆர் பெற்றார் சொக்கநாதா "

—சொக்கநாத வெண்பா - 56.

இத்திருப்பாடலைக் கேட்ட நண்பர் பெரிதும் மகிழ்ந்தார். திருவருள் ஒத்தாசை இன்றி எதுதான் நடக்கும்!

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில்
ஸ்ரீ தையல்நாயகி அம்பாள் சந்நிதியில்



தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் சார்பில்
வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்குப்
பொன்னுடை போர்த்தி வெள்ளிச் செங்கோல் வழங்கும் காட்சி

5—8—88.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலுக்குத்
தம் துணைவியாருடன் விஜயம் செய்து வழிபாடாற்றிய பாரதப்பிரதமர்



திருக்கோயில் பிரசாதம் பெற்று அணிந்து கொண்டு,
மன நிறைவுடனும் மகிழ்வுடனும்
விடைபெறும் காட்சி
5—8—88.

கட்டுரை எண். 98.

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit., Ph.D., D. P. P. A., D, U. N., I, U.
பருத்தியூர்.

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும், தலைவந்த ஆறும் கரந்ததெங்கே?
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருபோதும் விரகர் [தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புக அறியா மடப்பூங்குயிலே.

அ. மெய்வந்த நெஞ்சில் அல்லால்
ஒருபோதும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியா
மடப்பூங் குயில்.

(1) உண்மையுணர்வு பொருந்திய அடியார்களது மனத்தில் அன்றி, தங்களைச் சாமர்த்தியசாலிகள் என்று கருதும் போலி அடியார்களின் பொய்மை நிறைந்த உள்ளத்தில் எக்காலத்திலும் நுழையாதவள் அம்பிகை என்னும் இளமைத் தன்மையுள்ள குயில்.

(2) அம்பிகை விரும்பிய உள்ளமும் விலக்கிய உள்ளமும் ஈண்டு குறிப்பிடப்பட்டன. அன்பு, எளிமை, ஈடுபாடு, தன்னல மின்மை போன்ற நற்பண்புகளால் நிறைந்த உள்ளங்களே அவள் நாடிச் செல்லும் இடங்களாகும். சிறு களங்கமும் இன்றித் திகழும் அந்த உள்ளங்கள் தெளிந்த பொய்கை போன்று நிர்மலமாய் இருக்கின்றன. அப்பொய்கைகளில் வாழ்பவள் என சகஸ்ரநாமம் புகழுவதை முன்னரே கண்டோம்.

(3) மனிதர்களை ஏமாற்றுவது போல அவளையும் ஏமாற்றி விடலாமென்று எண்ணும் சில விரகர்கள் (சாமர்த்தியசாலிகள்) இருக்கின்றனர். அப்பொய்மையாளர்களின் உள்ளங்களில் புகுந்து வாழ அறியாதவள் அம்பிகை.

(4) திருவாமாத்தூரில் வாழ்ந்திருந்த 'சாமர்த்தியசாலி' ஒருவன் தனது சகோதரனின் செல்வத்தை வஞ்சித்துக் கவர்ந்து கொண்டான். வஞ்சிக்கப் பட்டவன் வழக்குத் தொடுத்தான். ஊர்ப் பொது மன்றத்தினர் வஞ்சித்தவனை ஆமாத்தூர் அம்பிகை முன் இருக்கும் 'வட்டப்பாறை' என்னும் பீடத்தில் கை வைத்துச் சத்தியம் செய்யச் சொன்னார்கள். பொய்ச் சத்தியம் செய்வோரை வட்டப் பாறை அம்மன் கடுமையாகத் தண்டித்து விடுவாள்.

ஊர்ப் பொதுமக்களும் சகோதரர்களும் வட்டப் பாறை அருகே கூடினர். ஏமாற்றிய சகோதரன் தன் கையிலிருந்த ஒரு மூங்கில் தடியினைத் தன் சகோதரின் கையில் அளித்து விட்டு "இப்போது என்னிடம் எனது சகோதரனின் செல்வம் எதுவும் இல்லை" என்று கூறிச் சத்தியம் செய்து விட்டான்.

ஊர்ச் சான்றோரும் உடன் பிறந்தானும் அச்சத்தியத்தை நம்பினர். வழக்குத்தொடுத்தவன் மூங்கில்தடியினைச் சகோதரனிடம் கொடுத்து விட்டான். அனைவரும் சிறிதூரம் நடந்தனர். வழியில் ஒரு சிறு கல் தடுக்கி விட 'சாமர்த்தியசாலி' கீழே விழுந்தான். அவன் கையிலிருந்த மூங்கில் தடியும் விழுந்தது. அது இரண்டாய்ப் பிளந்தது! அதனுள் சகோதரனின் செல்வங்கள் அனைத்தும் பொற்காசுகளாக மறைக்கப் பட்டிருந்தன. அவை வெளியே சிதறின! கற்பாறையின் அடியிலிருந்து வெளிப்பட்ட பாம்பு தீண்டி 'விரகன்' இறந்தான். கைத்தடியில் மறைத்துச் சாமர்த்தியமான முறையில் சத்தியம் செய்த விரகனை அம்பிகை விட்டாளில்லை.

(5) பொய்மை நிறைந்த உள்ளத்தில் தெய்வத் தன்மை நிற்காது. நிலைக்காது. அவர்களின் தவம் முதலிய முயற்சிகளும் பயனற்றுப் போகும். ''பொய்யிற் படு நெஞ்சுடையார் தவம் போல மாய''எனத் திருவிளையாடற்புராணம் உரைக்கிறது. தடாதகையினை நோக்கி விடுக்கப்பட்ட படைக்கலங்கள் அனைத்தும் பொய்யரின் தவம் போல் பயனற்றுப் போயின என்கிறது அப்புராணம்.

அத்தகு உள்ளம் கொண்டோரை "அசத்தியப் பேயர்கள்" என்று வன்மையாகக் கண்டிக்கிறது சுவாமிமலை நவரத்தினமாலை.

(6) அடியாரின் நெஞ்சக்கூட்டில் வாழும் அம்பிகை தம்மையே சாமர்த்திய சாலிகள் என எண்ணுவோரின் நெஞ்சிற் புகுவதில்லை. அம்பிகையின் 'வல்லபம்' அனைத்தையும் புகழ்ந்துஉரைத்த அபிராமி பட்டர் "பொய் வந்த நெஞ்சில் புக அறியாமை" மட்டுமே அவளுக்குத் தெரியாத வித்தை என்பது போல் உரைக்கிருர். "வஞ்சகர் நெஞ்சு அடையாள்" என்ருர் முன்பும்.

ஆ. தைவந்து நின் அடித்தாமரை சூடிய
சங்கரற்குக் கைவந்த தீயும் தலை
வந்த ஆறும் கரந்த தெங்கே?

(1) "அன்னையே! உனது ஊடலைத் தீர்க்கும் பொருட்டு நினது திருவடித் தாமரைகளை வருடி அவற்றினைத் தனது தலையில் சூடிக் கொள்ளும் பொழுது நினது கணவனை சங்கரனின் கையில் இருக்கும் தீயும், தலையில் இருக்கும் ஆறும் எங்கே சென்று மறைந்தன?

(2) ஊடல் தீர்க்க மனைவியின் கால்களை வருடித் தலையில் சூடுதல் என்ற நூன் மரபுப்படி சிவபெருமான் அன்னையின் திருவடிகளை வருடிச் சூடிக்கொள்வார் அல்லவா? அப்போது அவரது கரத்தில் இருக்கும் தீயும் தலையில் இருக்கும் கங்கையும் எங்கே சென்று மறைந்தன என நகைச் சுவை தோன்ற வினவுகிருர்.

தாருகாவனத்து முனிவர்கள் இயற்றிய ஆபிசார வேள்வியில் தோன்றிய 'அக்கினி'யை இறைவன் தனது கையில் அடக்கி வைத்திருக்கிருன். அவ்வாறே ஆணவத்துடன் பெருக்கெடுத்த ஆகாயகங்கையினைத் தன் சடையில் அடக்கிவைத்திருக்கிருன். இறைவன் தன் பெருங்கருணையினுல் அவற்றினைத் தன்னுடன் வைத்திருந்தாலும் அவை, அவள் அன்னையின் சந்நிதானத்தில் வரும்பொழுது பொய்மையைச் சிறிதும் விரும்பாத அவள்பார்வையிலிருந்து ஓடி மறைந்து விடுகின்றன.

அவள் 'மமதா ஹந்த்ரி' என்றபடி ஆணவத்தை அழிப்பவள்; 'பரமந்த்ர விபேதினி' என்றபடி எதிரிகளின் தீய மந்திரங்களை உடைப்பவள். எனவே அவை இரண்டும் மறைகின்றன என்பதே உட்கருத்து.

(3) "அடித்தாமரையினைச்" சூடும் பொழுது இறைவன் கரத்திலுள்ள தீ சுடுமே! கங்கையில் குளிர்ச்சி தண்ணென்றிருக்குமே? என எண்ணி இறைவன் அவற்றினை மறைத்தானே? இதுவும் இத்தொடரின் ஓர் இலக்கிய நயம்.

(3) தாங்களே 'வீரகர்கள்' என்று எண்ணித் தீய வேள்வி இயற்றிவர்கள் தாருகாவனத்து முனிவர்கள், கங்கையும் அங்ஙனமே எண்ணியவள், இவ்விரு சாமர்த்தியசாலிகளும் எங்ஙனம் உனது சந்நிதானத்தில் புகமுடியும்? அதனால்தான் மறைந்தனரோ? - இதுவும் ஒரு நயம்.

(5) 'சங்கரன்' என்றசொல் மங்கலத்தைச் செய்பவன், உலகினைக் காப்பவன் என்றெல்லாம் பொருள் தரும் சொல். உலகினைக் காக்கவும் உலகினுக்கு மங்கலத்தைச் செய்யவும் தான் சிவபெருமான் ஆபிசார அக்கினியைத் தாங்கினான். ஆகாய கங்கையைத் தரித்தான். அவனும் பொய் வந்த நெஞ்சினருக்குப் புகல் அளிப்பவனல்லன் என்பதை உணர்த்த இங்கு 'சங்கரன்' என்ற பெயரால் குறித்தார். மற்றும் "அனைத்தையும் சங்கரித்து மறைக்கும் திரோதானமூர்த்தி தீயையும் ஆற்றையும் மறைப்பதில் வியப்பில்லை" என்பதும் தோன்ற இறைவனை, 'சங்கரன்' என்றார்.

ஏவல், பில்லி, சூனியம் போன்ற தீயமாந்த்ரீகக் கொடுமைகளின் பிடியிலிருந்து விடுபடுதலே இப்பாடலின் பாராயண பலன் ஆகும். பாராயணம் செய்து பலர் பயன் எய்தியிருக்கின்றனர்

(தொடரும்)

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.

பார்வையாளர் குறிப்பு நகல்

கூட்டுறவு சங்கங்களின் தஞ்சை மண்டல இணைப்பதிவாளராகிய நான் இன்று, திருக்கடவூர் திருமிகு அமிர்தகடேசுவரர் கோயிலுக்கு வந்து சாமி தரிசனமும், அம்மன் அபிராமி தரிசனமும் கிடைக்கப் பெற்றேன். கோயில் அலுவலர்கள் மிகவும் சிறப்பாக வரவேற்று வழிபாடு முறைகளை நடத்தி, ஆண்டவன் அருளைப் பெற உதவியதில் மட்டற்ற மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆழிசூழ் உலகம் உள்ளளவும் இறைவன் அருள் அனைவருக்கும் என்றும் கிட்டவும் உலகம் வளம் பெறவும் மனமார பிரார்த்தித்து மீண்டும் வந்து வந்து அருள் பெறுவேன் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(S-d) பி. வெங்கடசுப்பையா, M. A.,

16—4—88 கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்.

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்

(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47. இதழ் 8, பக்கம் 417 இன் தொடர்ச்சி.)

3. அரிஸ்டாட்டில் (Aristotle) - தொடர்ச்சி (2)

(கி. மு. 384–322)

அரிஸ்டாட்டிலின் முத்துறை ஆய்வு :

அரிஸ்டாட்டில் இறைதத்துவ ஞானம் என்ற நூலில் (Metaphysics) தம் தத்துவக்கருத்துக்களை வெளியிடுகிறார். அதனை ஆங்கிலத்தில் META - PHYSICS என்பார்கள். ஆரம்ப நிலையில் அரிஸ்டாட்டில் பௌதீக சாத்திரத்திற்கே முதலிடம் தந்தார். அதற்கு PHYSICS என்று பெயர். அதற்கு அடுத்தாற் போலத்தன் ஆய்வுக்கு, தத்துவத்தை எடுத்துக் கொண்டார். Meta என்ற பதத்திற்கு "Next to" அடுத்தபடியான என்பது பொருள். ஆகவே இறைஞான தத்துவத்திற்கு அவர் ''பௌதீகசாத்திரத்திற்கு அடுத்தபடியானது'' என்ற பொருள்பட ''META - PHYSICS என்ப் பெயர் சூட்டினார் என்பது தான் அதன் பொருள்.

அரிஸ்டாட்டிலின் இறைதத்துவஞானம் சமரச (Universal) அடிப்படையில் அமைந்துள்ளதாகும் இன்று நிலவும் முக்கியமான மூன்று தலைப்புக்களில் அரிஸ்டாட்டில் ஆற்றல் மிக்க முறையில் அதனை அளந்து உரைக்கிறார். அந்த மூன்று தலைப்புக்களாவன: கடவுள், அரசு, மனிதன் (God, State and Man) என்ற முத்தலைப்புக்களில் அவர் ஆழ்ந்து அலசி ஆய்வுபுரிகிறார்.

கடவுளின் இயல்பு யாது?

ஆட்சி முறைகளில் எது மேம்பட்டது?

மனிதனுக்கு மிகமிக விருப்பத்தக்க ஒழுக்க முறைகள் யாவை?

அரிஸ்டாட்டில் கடவுளின் இயல்பைப் பற்றி இறை தத்துவ ஞானம் (Metaphysics) என்ற நூலிலும், அரசின் ஆட்சி முறை பற்றி அரசியல் (Politics) என்ற நூலிலும், மனிதனின் ஒழுக்க நெறி பற்றி ஒழுக்க முறை (Ethics) என்ற நூலிலும் அழகான முறையில் ஆராய்ச்சி செய்கிறார்.

அரிஸ்டாட்டிலின் இறைதத்துவ ஞானம் :

அரிஸ்டாட்டிலின் தத்துவ ஆய்வு முறைப்படி கடவுள் இந்த பிரபஞ்சத்தை இயற்றி ஆக்கிப்படைக்கவில்லை; ஆனால் அதன் இயக்கங்களுக்குக் அவர் காரணகர்த்தர் மட்டுமே ஆவார். (God is not the creator of the universe; but the cause of its motion) கடவுள் உலகம் முழுதும் சிருட்டி செய்தார் என்றால், கடவுள் ஓர் அரும்பெரும் கற்பனையுடையவன்; காரியம் ஆற்றுவதில் பொது வாகச் சமர்த்தன் ஆகமாட்டான் என்பது அவரது கோட்பாடு. ஆனால் கடவுள் என்பவர் பூரணத்துவம் பொருந்தியவர் - நிறைவான நின்மலன். அவர் நிறைவு பொருந்தியவர் ஆகையால் அவருக்கு நிம்மதி இன்மையோ அதிருப்தியோ துன்பமோ துயரோ கிடையாது. ஆகையால் அவர் பிரபஞ்சத்தை ஆக்கியவர் அல்ல; பிரபஞ்சத்தை அசைத்து இயக்குபவர் ஆவார்.

உலகினை எவ்வாறு இயக்குபவராக இலங்குகிறார்? இந்தக் கேள்விக்கு அரிஸ்டாட்டிலின் விடை விநோதமானது: "கடவுள் பிரபஞ்சத்தின் இயக்கமிலலாத இயக்குபவர் ஆகிறார்" என்கிறார். (God is the UNMOVED MOVER OF THE UNIVESE) அரிஸ்டாட்டிலின் சித்தாந்தத்தின்படி, இவ்வுலகை இயக்கும் ஏதும். அது மனிதனாகட்டும், அஃறிணை பொருளாகட்டும் அல்லது ஓர் எண்ணமாகட்டும் - ஏதும் ஓர் இயங்குகின்ற இயக்குபவராகத் தான் இருப்பார் (A moved mover). இதன்படி ஏர் மண்ணை இயக்கு கிறது; கை ஏரை இயக்குகிறது; மூளை கையை இயக்குகிறது. உணவு வேண்டுமென்னும் உணர்வு மூளையை இயக்குகிறது; வாழ்க்கை உள இயல்பு (instinct for life) உணவுத் தேவையை இயக்குகிறது இப்படியே அது தொடாகிறது. (The Plough moves the earth; the hand moves the plough; the brain moves the hand; the desire for food moves the brain; the instinct for life moves the desire for food and so on) வேறு விதத்தில் வைத்துச் சொலலவேண்டுமானால் ஒவ்வோர் இயக்கத்திற்கான காரணம், இன்னோர் இயக்கத்தின் முடிவாகும். (The cause of every action is the result of some other action) ஒவ்வோர் அடிமையின் எஜமானன். இன்னோர் எஜமானனின் அடிமை.

ஆவான். ஒரு கொடுங்கோலன் கூட அவனது பேராசையின் அடிமையாகவே இருக்கிறான். ஆனால் கடவுள் எந்த ஒரு காரியத்தி னாலும் ஏற்பட்ட முடிவோ பயனோ ஆகமாட்டார். அவர் எந்த ஓர் எஜமானனுக்கும் அடிமையாக மாட்டார் என்பது அரிஸ்டாட்டிலின் அரும்பெரும் விளக்கமாகும். அவரே எல்லா இயக்கத்திற்கும் காரணம். அவரே எஜமானர்கட்கு எல்லாம் எஜமானர். எல்லா எண்ணங்களையும் அவரே தூண்டி இயக்கத் துணை நிற்கிறார். இயக்கம் இராத, இவ்வுலகின் இயக்குபவர் அவனே. (The unmoved mover of the world)

மேலும் கடவுளுக்கு இவ்வுலகைப் பற்றிய ஏதும் தனி அக்கரை (interest) கிடையாது; ஆனால் உலகம் அவர்பால் அக்கரை கொண்டுள்ளது. கடவுளுக்கு இவ்வுலகைப் பற்றிய தனி அக்கரை உள்ளதென்றால் அவர் உணர்ச்சிக்கு உட்பட்டவராவரர். அவர் மனம் நிலையானது. எண்ணம் பாரபட்சம் அற்றது. உள்ளதை இயக்குவாரே அன்றி – அவரவர் செயலை முறைப்படி செய்வாரே யன்றி-பிரார்த்தனையாலோ, வழிபாட்டாலோ, தோத்திரத்தாலோ மனம் இரங்குவதும், இரக்கம் கொண்டு பாசம் கொள்ளுவதும், பாசம் கொண்டு பாரபட்சம் காட்டுவதும் அவரிடம் கிடையாது என்கிறார். அவர் அறவே இயக்கமற்றவர் (unmoved Lord) என்பது அரிஸ்டாட்டிலின் அசைக்க முடியாத ஆன்மிக நம்பிக்கை. இதில் பல அம்சங்களில் அவர் குரு பிளேட்டோவினும் வேறுபட்டு நிற்கிறார் என்பதைக் காணலாம்.

அழகிய மங்கை எடுத்துக்காட்டு :

கடவுள் ஓர் அமைதியான சர்வவல்லமை மிக்கவர். ஓர் அன்புள்ள காதலனை இயக்குதல் போல் செய்கிறான். அரிஸ்டாட்டில் இதற்கு ஓர் உலகியல் உதாரணத்தைத் தருகிறார். ஓர் அழகும் வசீகரமும் மிக்க மங்கை தெருவழியே நடந்து போய்க்கொண்டிருக் கிறாள். அவள் முற்றுமாக வேறு மாற்றம் இன்றித் தன்சிந்தனையி லேயே ஆழ்ந்து கிடக்கிறாள். அவள் பார்வை முற்றும் தரையை நோக்கியே இருக்கிறது. கண்ணும், கருத்தும், எண்ணமும், எழுச்சி யும் எல்லாமே நிலம்நோக்கி இருந்தது. குனிந்த தலை நிமிராமல் கொண்ட சிந்தனை மாறாமல் தெருவில் போய்க் கொண்டிருக்கிறாள். அவள் எவரையும் கண்ணெடுத்தும் காணவில்லை. ஆனால், வழியில் போகும் பேரழகின் வடிவை எல்லோரும் பிரமித்துப் போய்ப் பார்க்கிறார்கள். அவள் அழகின் அதிசயத்தோற்றம் எல்லாக் கண் களையும் அவள்பக்கம் இயல்பாகத் திரும்பச் செய்கிறது; மற்றவர் இதயங்களை இயங்கச் செய்கிறது. எல்லோரும் கண்கொட்டாத

அவள் அழகினைக் கண்டு களித்தனர். எல்லா மனங்களையும் சிந்தனை புரியச் செய்கிறது. இப்படியே தான் கடவுளுடைய அழகின் இயல்பும் என்கிறார் ஆராய்ச்சி மிக்க அரிஸ்டாட்டில். தான் எவ்வகையிலும் இயக்கமுறாது, தன் ஆற்றலால் தன் அருட்சக்தியால் பிறவற்றை அனைத்தும் கடவுள் இயக்குகிறார். இயங்காமல் இயக்கவல்ல ஈசன் அல்லவா? (The unmoved mover of the universe) பிறர் காட்டும் பேரன்பால் நம் முன் எல்லாம் இயக்கத்தைச் செய்கிறான் இறைவன். (It produes motion within all of us by being loved)

இஃது உலகியலுக்கு எங்ஙனம் பொருத்தம் ஆகிறது? நம் இலக்கியங்கள்பக்திநூல்கள்எல்லாம் எம்பிரான் "எண்குணத்தான்" என்று ஏற்றம் கூறுகின்றன. அரிஸ்டாட்டில் இதில் ஆண்டவன் ஓர் அறிவியலாளனாய் இருக்கிறானேஒழிய அன்புப்பிழம்பாக, கவிஞர்கள் போற்றும் கருணாமூர்த்தியான், விண்ணக வித்தகத் தந்தை எனப்பேசத் தவறி விட்டதாகப் பல மேலை நாட்டு மேதைகள் மெத்தகண்டித்து விமர்சிக்கின்றனர். கடவுள் "எண்குணத்தானாய்" இருப்பதால் பக்தர்கட்கு அருள்கிறான் - கருணை பாலிக்கிறார். அவதாரியாக வந்து அடியவர்கட்கு அருள் பாலிக்கிறான். சுந்தரருக்காகப் பரவைநாச்சியார்பால் இருமுறைதூதுசெல்கிறான் கண்ணப்பரின் கடுமையான அன்பைக் கருணை காட்டி வெளிப் படுத்துகிறார். அப்படி இருக்க, கடவுளுக்கு இயக்கமில்லை (unmoved mover) இதுபொருந்தாதது போலத் தோன்றும். ஆனால் ஈசன் குணங்களைக் கடந்து நிற்பவன் என்றும் குணாதீதன் என்றும் "மாற்றம்மனம்கழிய நின்றமறையோன்" என்றும் பேசப்படுகிறான். ஏன் சிவபிரானும் கூட இயக்கம் அற்றவன் என்றும் சித்தாந்தம் பேசுகிறது. அனைத்தும் அருட்சக்தியே ஆக்கிப் படைக்கிறது என அறிகிறோம். நிர்க்குணபிரம்மம் - குணமற்றது; உருவற்றது; நிறம் அற்றது; நிராகாரமானது. ஆனால் சகுணபிரம்மம், உருவு கொண்டது. அருள் வடிவானது. பக்தர்களின் பக்தியில் பரவசம் காண்பது. சைவசித்தாந்தத்தில் பரசிவம் இயக்கமற்றது. அவன் சந்நிதியில் அருள் சக்தியால் அனைத்து இயக்கமும் நிகழ்கின்றன. பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், கந்தபுராணம் போன்றவற்றில் ஆண்டவனின் அருட்சக்தியின் ஆற்றலை, பெருமையை, அருமைப பாட்டைக் காண்கிறோம். எனவே அரிஸ்டாட்டில் பேசும் இறைவன் பரசிவம் போன்றது. சூரியன் சந்நிதியில் தாமரைகள் தாமே மலர்கின்றன. அதுபோல இயக்க மற்ற, இயக்கும் கடவுள் சந்நிதியில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் பிரபஞ்சத்தில் நிகழ்கின்றது, என்பது அரிஸ்டாட்டிலின அனுமான நம்பிக்கை.

ஆண்டவன், 'UNMOVED MOVER OF THE UNIVERSE' என்ற கோட்பாடு பிழை பொருந்திய கருத்தாகாது எனக் கொள்ளுவது தவறாகாது.

மக்கள் துயரம் அனுபவிக்கும் போது தாம், தெய்வசக்தியை நாடுகின்றனர். இறைவன் அருள் புரியாமல் அசைவற்று இருந்தால் யாது பயன் எனக் கிரேக்க மக்கள் இக்கருத்தைச் சுண்டிப் பார்த்தனர். கிரேக்க நாட்டில் கி. மு. வில் பல நூறு கடவுள்கள் பரந்து கிடந்தனர்; பாமரர் அவர்கள் அருளைக்கோரிப் பெற்றும் அனுபவித்தனர். அரிஸ்டாட்டில் "ஒன்றேகுலம் ஒருவனே தேவன்" என்ற சித்தாந்தத்தை நிறுவச்செய்த முயற்சியே இயக்க மற்ற பிரபஞ்சத்தை இயக்கும் கடவுளை அறிமுகப்படுத்தி இருக்கக் கூடும். 2300 ஆண்டுகட்கு முன்னரே அரிஸ்டாட்டில் "ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டினைக் கொண்டு வந்து மக்களிடையே அறிமுகப்படுத்தியது ஒருமகத்தான செயல் அன்றோ? அரிஸ்டாட்டில் நுண்ணிய அறிவும், திண்ணிய உறுதிப்பாடும் கொண்டவர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஆதார நூல்கள் :

A History of Western Philosophers by Bertrand Russell.
Basic Teachings of Great Philosophers by S. E. Frost
100 Great Thinkers by Jay E. Greene
Living Blographies of Great Philosophers by Thomos &Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakadeswarar Devasthanam, Thirukkadavur.

The Temple was visited by us. It has been nexcellently maintained neat and happy to see the people. Kept very clean and tidy.

K. Gopalan,
Director of School Educations,
Madras - 6.

1—5—88

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞானபோதம் :

சிவஞானபோதத்தின் முதல் சூத்திரத்தின் முதல் அதிகரணம் இந்த உலகம் தோன்றி நின்று அழியும் தகையது என்பதனை விளக்குகிறது. இவ்வதிகரணம் உலகாயதருக்கும் மீமாஞ்சகருக்கும் மறுப்புக் கூறுகிறது. உலகாயதர், இந்த உலகம் கண்ணால் காணப் படும் தன்மைத்தாக உள்ளது; எனவே இது உண்டு. ஆனால் இது முன்பு தோற்றப் பெற்றது என்பதோ இது பின்னே ஒரு காலத்தில் அழியும் தரத்தது என்பதோ இல்லை என்று கூறுவர். மீமாஞ்சகர் என்பார் வேதத்தை உடன்பட்டவர்; எனினும் அதிலும் கர்மகாண் டத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு ஞானகாண்டம் புனைந்துரையால் ஆயது என்று கூறுவர். இவர்கள், மக்கள், வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்தால் அந்தக் கருமங்களே பயன்கொடுக்கும் என்றும் கருமங்களிலும் நினைந்து செய்யும் காமிகம் இம்மை மறுமைப்பயன்களையும் நினைந்து செய்யா நிட்காமிகம் மோட்சத்தை யும் கொடுக்கும் என்பர்.

கருமமே தன் பயனைக் கொடுக்கும் எனக் கூறுவதால், இவர்கள் உலகம் தோன்றி யழியும் பொருள் என்பதனையும் அதனைத் தோற்று வித்து அழிக்கின்ற கடவுள் ஒருவன் உளன் என்பதையும் உடன் படுவது இல்லை.

இவ்வதிகரணத்தில் உலகாயதரை வெளிப்படையாகவும் பூர்வ மீமாஞ்சகரைக் குறிப்பாகவும் மறுக்கின்றார் மெய்கண்டார்.

மீமாஞ்சகர், உலகாயதர் போலன்றி அனுமானத்தை உடன் படுவர். அவர்கள், உலகம் தோற்றத்தையும் அழிவையும் உடையது என்பது, காட்சிக்கு எய்தவில்லை என்பதோடு அனுமானத்தாலும் துணிதற்கு இயலவில்லை என்று கூறினர். அதனை ஆசிரியர் உலகத்திற்குச் சுட்டப்பட்ட அடைமொழியால் மறுத்துக் கூறினர்.

அவ் அடைமொழியாவது, 'உலகம் அவன், அவள், அது என்னும் அவயவப்பகுப்புடையது.' என்பது ஆகும். அவயவப் பகுப்புடையது, எனவே இது மாறிவரும் நிலையுடையது என்பது பெறலாம். பெறவே, இன்று நின்றுள்ள இவ்வுலகம் முன்பு தோற்றப் பெற்றது என்பதும் பின்னே அழியும் தகையது என்பதும் உணரலாம், அனுமானத்தால் கூறினர்.

அவயவப்பகுப்பு உடைமையும் சடமாய் இருத்தலும் பலவாய் இருத்தலும் இவ்வுலகத்திற்கு இலக்கணம். இவற்றை மீமாஞ்சகர் உடன் படுகின்றனர். இம் மூன்று தன்மைகளையும் உடையநிலை, தோன்றி நின்று அழியும் பொருள்கள் எவற்றிற்கும் உண்டு. எனவே இம்மூன்று தன்மைகளையும் உடைய இவ்வுலகமும் தோன்றி நின்று அழிவதே என்று மீமாஞ்சகருக்கு அவர்கள் ஒத்துக் கொண்ட அனுமான அளவையைக் கொண்டே குறிப்பாக விடை கூறியிருக்கின்றார் ஆசிரியர்.

உலகாயதருக்கு, அவர்களுக்கு விளங்கும் வகையில் காட்சி அளவையைக் கொண்டே வெளிப்படையாக விளக்கம் தந்துள்ளார்.

இந்த ஐந்து பூதங்களை முதற்காரணமாக உடைய இவ்வுலகம் நிலைத்தொழில் கொண்டது. இது அழிவையும் தோற்றத்தையும் தனக்குத் துணைக் காரணமாகக் கொண்டே இருக்கிறது. அதாவது, அழிவு இல்லாவிடில் தோற்றம் இல்லை; தோற்றம் இல்லாவிடில் நிற்றல் இல்லை. இது பலபொருள்களிடத்துள் கண்ணால் காணும் தன்மையதே! இது எங்ஙனம் அழிந்து தோன்றுகிறது எனில், ஒரு பருவத்தில் சில ஜாதிப்பொருள்கள் - எடுத்துக் காட்டாக - குறிப்பிட்ட சில பூ, காய்போன்றன தோன்றி, நின்று, பின் அழிந்து விடுகின்றன. அவற்றைப் பார்க்கின்றோம். அதே போலவே கண்ணால் காணப்படும் இந்த உலகமும் ஒருகாலத்தில் ஒட்டு மொத்தமாக அழியும்; பின தோன்றும்; என அறிந்து கொள்க! என்று உலகாயதருக்கு ஆசிரியர் காட்சியளவையிலேயே விளக்கம் கூறியுள்ளார். இக்கருத்துக்களை,

"பூதாதி ஈறும் முதலும் துணையாகப்
பேதாய் திதி ஆகும்; பெற்றிமையின் — ஓதாரோ
ஒன்றொன்றின் தோன்றி உளதாய் இறக்கண்டும்
அன்றென்றும் உண்டென்ன ஆய்ந்து"

என்னும் வெண்பாவில் கூறுகின்றார். இவ்வெண்பாவில் உள்ள சொற்களைக் கீழ்வருமாறு கொண்டு கூட்டிப் பொருள் காணுதல் முறை.

"பேதாய்! - பூதாதி - திதி - ஈறும் முதலும் துணையாக ஆகும்- ஒன்று ஒன்றின் - பெற்றிமையின் - தோன்றி உளதாய் இறக் கண்டும் - என்றும் அன்று உண்டு என்ன - ஆய்ந்து ஓதாரோ" என்பதே அம்முறை.

இவ் அதிகரணத்தில் - அதாவது வெண்பாவில் பிற்பகுதியில் கூறப்பட்டது உண்மையில் அனுமானமே ஆயினும் அதனைக் காட்சியாகவே கூறியதும் உலகாயதர் கொள்கை பற்றியே. எங்ஙனம் எனில், புகை பல இடங்களிலும் நெருப்போடு கூடியே இருத்தலைக் காணுதலால் ஓரிடத்தில் புகை காணப்பட்டாலும் இவ்விடத்திலும் புகை நெருப்போடு கூடியே உள்ளது என்த்துணிதல் முன்னர்க் கண்ட காட்சி பற்றியேயாதலால் அது காட்சியேயன்றி அனுமானம் அன்று என்பது அவர் கொள்கை. அதுபோல உலகத்தில் உள்ள ஒருபொருள், ஒருகுறிப்பிட்ட காலத்தில் தோன்றி ஒரு குறிப்பிட்ட காலம் வரை நின்று ஒரு குறிப்பிட்ட காலத்தில் அழியும் தன்மையைப் பார்க்கும் பொழுது அது கொண்டு இந்த உலகமும் ஒரு நாளில் முழுமையும் அழியும் என்று உணரக்கூடும் என்றார் ஆசிரியர். ஒருவரை மறுக்கும் பொழுது அவர்கள் ஒத்துக்கொண்ட அளவையிலேயே மறுப்பது சிறந்தது. அங்ஙனமே உலகாயதரைக் காட்சி அளவையிலும் மீமாஞ்சகரை அனுமான அளவையிலும் மறுத்துள்ள ஆசிரியரின் திறம் எண்ணிப் போற்றத்தக்கது.

சிவஞான சித்தியார் :

இக்கருத்துக்களைச் சித்தியார் ஆசிரியர் தனித்தனிப் பாடல்களில் விளக்கிக் கூறுகின்றார். முதல் நூற்பாவை ஒட்டியுள்ள அதிகரணப் பாடல்களில் முதலாவது உலகாயதருக்கு விளக்கம் கூறுகிறது.

தோன்றுதலும் அழிதலும் காட்சி அளவையில் காணப்படாமையால் உலகம் தோன்றி அழியும் என்பது பொருந்தாது என்று கூறும் உலகாயதருக்கு விடை:- பூதங்களும் அவற்றின் காரியமான உடல் முதலான பகுதிகளும் தோன்றி அழிதல் கண்ணால் காணப்படுதலின் இப் பூதங்களின் காரியமான இவ்வுலகமும் தோன்றி அழியும் தன்மைத்தே ஆகும். இதனை,

"உதிப்பதும் ஈறும் உண்டென்று உரைப்பது இங்கு என்னை [முன்னோர்
மதித்துலகு அநாதியாக மன்னியது என்பர் என்னின்
இதற்குயான் அனுமானத்தி எடேன் இப்பூதாதி எல்லாம்
விதிப்படி தோன்றிமாயக் காணலால் மேதினிக்கே"

என்னும் பாடல் விளக்குகிறது. இப்பாடல் கீழ்வருமாறு கொண்டு கூட்டிப் பொருள் காணுதல் முறையுடையது.

உதிப்பதும் ஈறும் உண்டு என்று இங்கு உரைப்பது என்னே? - முன்னோர் மதித்து உலகம் அநாதியாக மன்னியது என்பர் - என்னின் - இப்பூதம் ஆதி எல்லாம் - மேதினிக்கே - விதிப்படி - தோன்றி மாயக் காணலால் - இதற்கு யான் அனுமானுதி எடேன்-

இப்பாடலில், இதற்கு யான் அனுமானம் முதலான அளவைகளைஎடுக்கமாட்டேன் என்று ஆசிரியர் கூறியுள்ளது முதல்நூல் ஆசிரியரை ஒட்டியே ஆகும். உலகாயதரைக் காட்சி அளவையில் மறுப்பதேசிறந்தது என்று இவரும் அழுத்தமாகக் எண்ணியுள்ளார் என்பது இங்குக் குறிக்கத் தக்கது.

அடுத்துச் சித்தியார் ஆசிரியர் இத்தோற்ற அழிவினைத்தரும் கருத்தா ஒருவன் வேண்டும் என்று கூறுகின்றார்.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakadeswarar Devasthanam, Thirukkadaiyur.

As on every occasion this visit to this holy shrine has been an inspring one. My wife, sister and I fed richly blessed by lord Amirthakadeswarar and Goddess Abirami. Our thanks to Guru Maha Sannidhanam and the staff.

(S-d) Justice S. Natarajan,
3—6—88 Judge Supreme Court of India.

★

Iam happy to see the well maintained ancient temple. Iam plesed with the upkeep of the Tamilian tradition.

(S-d) R. Vaithiyanathan, M. L. A.
15—5—88 Chairman Delegator degislation,
Pondichery.

அவனிகந்தர்வ ஈசுவரகிரகம்

டாக்டர் திரு. இரா. கலைக்கோவன்,
பி. லிட்., எம். பி. பி. எஸ்., டி. ஒ.,

கட்டுரை எழுதத் துணை புரிந்தவர் :
செல்வி மு. நளினி, எம். ஏ., (வரலாறு)

சோழப் பேராட்சியின் விதையூன்றலுக்கும் விரிவாக்கத்திற்கும் தோள் தந்து உதவிய சிற்றரச மரபுகளுள் பழுவேட்டரையர் மரபு சிறப்புக்குரியது. முதலாம் ஆதித்தன் காலந்தொட்டு முதலாம் இராசராசன் காலம் வரையிலும் பழுவூரைத் தலைநகராய்க் கொண்டு அரசோச்சிய பழுவேட்டரைய மன்னர்களால், கலைப்பேழைகளாய் உருவாக்கப்பட்ட ஐந்து திருக்கோயில்கள், இன்றளவும் பழுவூரில் காலத்தை வென்று நின்று கொண்டிருக்கின்றன. இந்த அழகுக் கற்றளிகளில் இரண்டைக் கொண்டிருக்கும் கோயில் வளாகமே அவனிகந்தர்வ ஈசுவரகிரகம்.

திருச்சி சயங்கொண்டம் சாலையில் திருச்சியிலிருந்து ஐம்பத்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது மேலப்பழுவூர். இதையடுத்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள கீழையூரில் தான் அவனிகந்தர்வ ஈசுவரகிரகம், இரண்டுமையக் கோயில்களையும், ஆறு சுற்றுலைத் திருமுன்களையும் உள்ளடக்கிய கோயில் வளாகமாய்ப் பழம்பெருமைகளின் பரிதாபச் சுவடுகளுடன் காட்சி தருகிறது. அவனிகந்தர்வபுரம் என்றும் அவனிகந்தர்ப்ப புரம் என்றும் கல்வெட்டுகளில் அழைக்கப்படும் இடத்தில் அமைந்தமையால் இக்கோயில் வளாகத்திற்கு அவனிகந்தர்வ ஈசுவரகிரகம் என்று பெயர் ஏற்பட்டது போலும். சில கல்வெட்டுகள் இக்கோயிலை அவனிகந்தர்ப்ப ஈசுவரகிரகம் என்றும் சுட்டுகின்றன.

இப்போதைய கோயில் வளாகத்தின் ஒரே நுழைவாயில் கோபுரம் மூன்று நிலைகளுடன், ஒப்பனை கலைத்த நடிகையைப்போல, செங்கற்கள் வெளித்தெரிய, ஆங்காங்கே செடியினங்கள் தலைகாட்ட, முறையான பராமரிப்பின்மையின் மொத்த விளக்கமாய்ச் சிறகொடிந்த பறவையெனச் சிங்காரமிழந்து நிற்கிறது. மேற்கு நோக்கியுள்ள இக்கோபுர வாயிலின் இருபுறமும் பக்கத்திற் கொருவராய் நேர் நோக்கிய நிலையில் இரண்டு வாயில்காப்போர், சடாமுடியும் அலங்கார முப்புரிநூலும், இடையாடையின் அழகும்

இவர்களைப் பத்தாம் நூற்றாண்டினராக்குகின்றன. செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். வலப்புறம் இருப்பவரின் வலத் தோளில் படமெடுத்த நிலையில் பாம்பொன்று! இவரது வலக்கை மழுவை இடுப்போடு அணைத்தபடி இருக்க, இடக்கை வியப்பு முத்திரையில் உள்ளது. இடப்புறம் நிற்பவரின் இடக்கை மழு மேலிருக்க, வலக்கை வியப்புமுத்திரை காட்டுகிறது.

கோபுர வாயில் வழியே கோயில் வளாகத்தில் நுழைந்ததும் கண்ணெதிரே படமாவது மேற்கு நோக்கி அமைந்துள்ள இரண்டு மையக் கோயில்களும்தாம். வாயிலுக்கு நேரே இருக்கும் கோயிலைக் கல்வெட்டுகள் தென்வாயில் ஸ்ரீ கோயில் என்றழைக்க, ஊர்மக்கள் அகத்திசுவரம் என்கிறார்கள். இதன் வடபுறம் இருக்கும் கோயிலை வடவாயில் ஸ்ரீ கோயில் என்று கல்வெட்டுகள் பெயரிட ஊரார் சோழீச்சரம் என்கிறார்கள். இவ்விரண்டு கற்காவியங்களும் பழுவேட்டரையர்களின் பண்பாட்டுப் பரிசுகள். இந்த இரண்டைச் சுற்றிலும் ஆறு சிறு கோயில்கள் சுற்றாலைத் திருமுன்களாய்க் காணப்படுகின்றன.

கோயில் சுற்றுவெளியில், மேற்குப் புறத்தில், கோபுரத்தின் வலப்புறமாய் அமைந்துள்ளது முருகனின் திருமுன் உள்மண்டபம் கருவறை என்னும் அமைப்பு; நாகர சிகரம்; உள்ளே முருகப் பெருமான் மகிழ்விருப்பில், பின் கைகளில் சக்தியும் வஜ்ரமும் இருக்க வல முன்கை காக்கும் குறிப்புக்காட்ட, சின்முத்திரையில் இருக்கும், இட முன் கை தொடையின் மீது அமைய, செவிகளில் பனையோலைக் குண்டலங்களும், தோளில் வாகுவளையங்களும், மார்பில் சன்ன வீரமும், தலையில் கரண்ட மகுடமுமாய் விளங்கும் முருகப்பெருமானின் முக அழகு அளப்பரியது.

வடபுற வெளிச்சுற்றில் ஒரு சிறு கோயில், கருவறை, உள் மண்டபம், அதையடுத்து ஒரு திண்ணை என, வேசர சிகரத்துடன் அமைந்துள்ளது. இப்போது இக்கோயிலைப் பின்னிரு கைகளில் மலர் மொட்டுகள் ஏந்தி, முன்னிரு கைகளைக் காக்கும் குறிப்பிலும், அருட்குறிப்பிலும் கொண்ட அம்மையொருவர் அபித குசாம்பிகை என்ற பெயருடன் அலங்கரிக்கிறார். இந்த இறைவடிவம் மிகப் பிற்பட்ட காலத்து நிறுவல்.

கிழக்குப் புறச் சுற்றுவெளியில் உள்ள திருமுன்னில் ஒன்பதாம் நூற்றாண்டுக் கலைப்படைப்பான கதிரவன், இருளில் மூழ்கி நிற்கிறார். இடுப்பளவில் மடக்கி உயர்த்திய இரு கைகளிலும் விரிந்த தாமரை மலர்களை ஏந்தியவராய் மேற்குப் பார்த்த திருமுகத்துடன் நிற்கும் இக்கதிரவனைக் கை விளக்கின் உதவியின்றிக் கண்டு மகிழ முடியாது! கதிரவனுக்கே இந்த கதி!

தென்புறம் செவ்வக வடிவில் அமைந்துள்ள திருமுன்னில்தான் பழுவேட்டரையர் காலத்து ஏழுவர் அன்னையர், வலப்புறம் தென்முகக் கடவுளும் இட புறம் பிள்ளையாரும் எதிரும் புதிருமாய்க் காவலிருக்க, ஆயிரத்து நூறு ஆண்டுகளாய் அமர்ந்தது அமர்ந்தபடி காட்சி தருகின்றனர். (தென்முகக் கடவுளை யடுத்து வரிசையாக நான்முகி, மயேச்சுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என வீற்றிருக்கும் இத்தேவியரின் முன்னிரு கைகளில் வலக்கைகள் காக்கும் குறிப்பிலும், இடக்கைகள் தொடையின் மீது வைத்த நிலையிலும் காணப்படுகின்றன.

மூன்று முகங்களுடன், வலப் பின்கையில் அக்கமாலையும் இடப் பின்கையில் குண்டிகையும்கொண்டு அமர்ந்திருக்கும் நான்முகியின் இடப்புறம் வலப் பின்கையில் மழுவும், இடப் பின்கையில் அக்க மாலையுமாய் மயேச்சுவரியும், அவரை யடுத்து இடப்பின்கையில் மலர் மொட்டும், வலப்பின்கையில் வஜ்ரமும்கொண்டு கௌமாரியும் அமர்ந்துள்ளனர். வைஷ்ணவி வலப் பின்கையில் சக்கரமும் இடப் பின்கையில் சங்கும் கொண்டிருக்க, வராகி இடப் பின்கையில் கலப்பையும், வலப் பின்கையில் குறுந்தடியும் வைத்துள்ளார். இவரையடுத்து அமர்ந்திருக்கும் இந்திராணி, வலப் பின்கையில் வஜ்ரமும், இடப்பின்கையில் அங்குசமும் ஏந்தியிருக்க, வரிசையின் இறுதியில் அமர்ந்திருக்கும் சாமுண்டி, வலப்பின்கையில் முத்தலை ஈட்டியும், இடப் பின்கையில் தலையோடும் இருக்க, நெற்றிக் கண்ணும், மண்டையோட்டு முப்புரி நூலுமாய் விழிகளில் கனல் தெறிக்க, அசுரப்பார்வை பார்த்தபடி, அழகாய் அமர்ந்திருக்கிறார். இடையாடை அனைவர்க்கும் ஒரே விதமாய் அமைய, மார்புக் கச்சு சாமுண்டிக்கு மட்டும் இல்லை.

வளாகத்தின் தென்மேற்கு மூலையில் முன்கைகளிலும், துதிக் கையிலும் மோதகம் கொண்டு, பின் கைகளில் அக்கமாலையும், கொம்பும் ஏந்திப் பிள்ளையார் ஒருவர் பரிதாபக் கோலத்தில், ஏகாந்தமாய் அமர்ந்திருக்கிறார். தென்வாயில் ஸ்ரீ கோயில் இடை நாழிகையின் வடபுறம் சண்டேசுவரருக்கான உட்கோயில் உள்ளது.

இரண்டு மையக் கோயில்களில் வடபுறம் இருப்பது அளவில் சிறியது. இதைத்தான் வடவாயில் ஸ்ரீ கோயில் என்று கல்வெட்டுக் கள் அழைக்கின்றன. மகாமண்டபம், உள்மண்டபம், கருவறை என அமைந்திருக்கும் இக்கோயிலின் மகாமண்டபத்தை ஆறு தூண்கள் தாங்குகின்றன. கிழக்குப்பார்த்த நிலையில் தனியே ஒரு பிள்ளையார் மகாமண்டபத்தின் மேற்றிசையில் வீற்றிருக்கிறார். உள் மண்டபத் துக்குச் செல்லும் வாயிலின் இருபுறமும் பக்கத்திற்கொருவராய்

வாயில்காப்போர்! வலப்புற வாயில்காப்போர் இடுப்புக்குக் கீழ் இடப்புறம் திரும்பிய நிலையில் வலக்காலை உயர்த்தி மழுவின் கத்திப் பகுதியில் ஊன்றியுள்ளார். இடக்கை மழுவின் மேல்மட்டத்தில் இருக்க, வலக்கை வியப்புமுத்திரை காட்டுகிறது. இடையாடையின் அழகியமுடிச்சு இடுப்பிலிருக்க, முடிப்பின் தொங்கல் இடத்தொடையில்; அலங்கார முப்புரி நூலும், கோரைப்பற்களும், சடாமகுடமும், செவிகளில் பனையோலைக் குண்டலங்களும், தோள்களில் வாகு வளையங்களும், மகுடத்தில் கீர்த்தி முகமுமாய் வலப்புறத்தார் இருக்க, இடப்புறத்தார் நேர் நோக்கியவராய், வலக்காலை முழங்கால் அளவில் இலேசாக மடக்கியபடி இதே அலங்காரங்களுடன், வலக்கையை மழுவின் மேல் ஊன்றி, இடக்கையைச் சுட்டு முத்திரையில் நீட்டிச் சுந்தரமாய் நிற்கிறார்.

உள் மண்டபத்தின் வடபுறத்தில் தெற்குப் பார்த்தவராய், பின் கைகளில் மலரேந்தி, முன் கைகளைக் காக்கும் குறிப்பிலும், அருட்குறிப்பிலும் அமைத்து அழகிய முறுவலுடன் அம்மை நிற்கிறார். இவரை ரிஜித குசும குந்தளாம்பிகை என்ற பெயரால் அழைக்கிறார்கள். கருவறையில் வடவாயில் ஸ்ரீ கோயில் மகாதேவர் வட்ட ஆவுடையாரும், லிங்கத் திருமேனியுமாய்க் காணப்படுகிறார்.

கருவறையின் புறச்சுவர்களில் முப்புறமும் கோட்டங்கள் உள்ளன. வடபுறத்தில் நான்முகனும், தென்புறத்தில் ஆலமர் அண்ணலும், கிழக்கில் சுப்பிரமணியரும் அமர்ந்தகோலத்தில் அழகு பொலிய அருள் செய்கின்றனர். நான்முகன் வலப் பின் கையில் அக்கமாலையும், இடப் பின் கையில் குண்டிகையும் கொண்டு, வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இடமுன் கையைத் தொடையின் மேல் வைத்திருக்கிறார்.

கிழக்குக் கோட்டத்தில் முருகன், சுப்பிரமணியராய்ப் பின்கைகளில் வஜ்ரமும் சக்தியும் இருக்க, மகிழ்விருப்புக் கோலத்தில் வலக் கையில் காக்கும் குறிப்புக் காட்டி, இடக் கையைத் தொடையின் மேல் வைத்தவராய்க் காட்சியளிக்கிறார். இவர் திருமேனியின் பின்னால் தீச்சுடர்கள் ஒளிவிரிக்க, மார்பில் சன்னவீரமும், தலையில் கரண்ட மகுடமும் அழகூட்டுகின்றன. இந்த அழகானசிற்பத்தின் மூக்கும் இதழ்களும் யாராலோ சிதைக்கப்பட்டிருக்கின்றன. எந்த அரக்க மனம் இந்த விகாரச் செயலில் ஈடுபட்டதோ தெரியவில்லை. ஆக்க முடியாத கைகள் அழிக்கத்தான் எப்படியெல்லாம் துடித்துச் செயலாற்றுகின்றன.

தென்புறக் கோட்டத்தில் ஆலமர் அண்ணலாய், வலமுன் கையின் முத்திரையிலும், இட முன் கை ஆகூய வரதத்திலும் இருக்க,

வலப் பின் கையில் அக்கமாலையும், இடப் பின் கையில் மலரும் கொண்டு, சிவபெருமான் எளியார்க்கு இளகிய இறைவனைத் திருத்தோற்றம் காட்டுகிறார். சடாமகுடமும், வீராசனத் திருக் கோலமும், எளிய அழகிய ஆடையணிகளும், கருணை பொலிந்த இந்தப் பழுவூர்ப் படைப்பைச் சிற்ப இமயமாய் உயர்த்துகின்றன. இக்கோயிலில் உள்ள கோட்டச் சிற்பங்களில் அழகிலும், மெய்ப் பாட்டு வெளிப்பாட்டிலும், வடிப்புக் கூர்மையிலும் இச்சிற்பத்திற்கு இணை வேறில்லை. பார்வை கனிவிக்கும் பேரெழில் படிமம் இது. அன்பும், அருளும், கருணையும் பெருமிதமும் கலந்த மெய்ப்பாட்டு நிலையை இச்சிற்பத்தின் முகத்தில் தேக்கி வைத்த சிற்பியின் திறனை என்னென்பது? எப்படி வியப்பது!

கோட்டங்களுக்கு மேல் மகர தோரணங்களில் சிற்பங்கள் இருந்து பொலிந்துள்ளன. கொடுங்கையின் கீழ், பூத கணங்கள் காவியக்காட்சி படைக்கின்றன. இசை வல்லார்களைப் போல் இதயத்தை நெகிழ்விக்கும் இன்பக் கோலங்களில் இந்த இளைய கணங்களின் அழகுக் காட்சிகள், ஆயிரமாண்டுகளுக்கு முற்பட்ட கலைப் பார்வைக்குக் கவிதைச் சான்றுகளாய் நின்று கண்களை நிறைவிக்கின்றன. வீணை, மேளம், தாளம், குழல் இவற்றை ஏந்தியும், இசைத்தும் சுவைகூட்டும் கணங்கள் ஒருபுறம்! இந்த இசைக்கு ஏற்றாற் போல் அர்த்த ரேசிதத்தில் கைகளை நீட்டி, ஆடல் அசைவுகளில் கால்களை வைத்து நாட்டியம் நிகழ்த்தும் கணங்கள் ஒருபுறம்! இந்த இசைக்குழுவிற்கு இடையில் நிமிர்ந்தும் குனிந்தும் நின்றும் நடத்தும் சுவைக்கூட்டமாய்ச் சுந்தரகணங்கள் சில ஒருபுறம்! தாடியுடன் ஒன்று தவித்துப் பார்க்கின்றது; கூடிமகிழ இன்னொன்று துணையைத் தேடுகிறது: கணங்களுக்குக் கூட இத்தனைக் கனவா என்ற கேள்வி நம்முள் எழுகிறது. கொடுங் கைக்கு மேல் யாளி வரிமானம், அதனையடுத்து விமானத்தின் இரண்டாம் தளம், சாலை, கீர்த்திமுக விமான தேவதைகளுடன் வேசரசிகரத்தில் அமைந்துள்ளது. இரண்டாம் தளத்தின் நாற்புற மும் சாலைக்கொரு தெய்வமும், கீர்த்திசிகரத்தின் கீழொரு தெய்வ முமாய் எட்டுத் தெய்வ வடிவங்கள் காணப்படுகின்றன. தென்புறம் தென்முகக் கடவுளும், வடபுறம் நான்முகனும், கிழக்கில் முருகனும் அமர்ந்த கோலத்தில்!

கோபுர வாயிலுக்கு நேரே பலிபீடமும் நந்தியும். இந்தப் பலி பீடத்தில் ஒரு கல்வெட்டு உள்ளது. அடிகள் பழுவேட்டரை யருடைய கைக்கோளப் படைப் பிரிவைச் சார்ந்த மகாதேவன் இரணமுகராமன் என்பார் இந்தப் பலிபீடத்தை எடுத்ததாகக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு மைய அரசின் கல்வெட்டறிக்கையில் பதிவாகவில்லை.

இப்பலிபீடத்திற்கு நேரே அமைந்துள்ளது தென்வாயில் ஸ்ரீ கோயில் எனப்படும் அகத்தீசுவரம். மகாமண்டபம், சிறியதொரு இடைநாழிகை, அதையடுத்து உள்மண்டபம், கருவறை என்றமைந்துள்ள இக்கோயிலின் அழகு சொல்லுந்தரமன்று. கருவறையும், உள்மண்டபமும், இடைநாழிகையும் ஒரு காலத்திலும், மகாமண்டபம் வேறொரு காலத்திலும் கட்டப்பட்டுள்ளன.

10. 5 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமும் உள்ள மகாமண்டபத்தை இருபது தூண்கள் ஐந்து வரிசைகளாய் நின்று தாங்குகின்றன. இந்த இருபதில், நான்கு வட்டத் தூண்கள் மண்டப நடுவில் உள்ளன. மற்ற பதினாறு தூண்களையும் அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டுள்ள அழகிய சிங்கங்கள் தாங்குகின்றன. இந்தத் தூண்கள் ஒவ்வொன்றும் பழுவூர் மன்னர்களின் கலையார்வத்திற்கும், அக்காலத்துச்சிற்பவாசிரியர்களின் கற்பனையாற்றலுக்கும், வடிப்புத்திறனுக்கும் நிலைத்த சான்றுகளாய் யுகம் யுகமாய் நின்று புகழ் பரப்பும்.

குத்துக்காலிட்டு அமர்ந்த சிங்கத்தின் தலையின் மேல் தூண் எழும்புகிறது. தலையின் மேல் ஒரு பல பட்டை உருளைப் பகுதியும், அதன் மேல் உடுக்கை போல் இடைப் பகுதியும், அதற்கு மேல் விரிந்தவாய்க் குடுவை போல் மேற்பகுதியும் அழகாய், அளவாய் அமைய, பெரியபலகை கூரையாய் நிற்கிறது. இந்தப் பலகையைத் தாங்கக் குடுவை வாயின் மேல் ஒரு தாங்கல்! அமர்ந்திருக்கும் சிங்கங்களோ திறந்த வாயும், சுருள்முடியும், சுருட்டிய வாலும், பளிச்சிடும் கண்களுமாய் நம்மைப் பரவசப்படுகின்றன. கால் விரல்களில் கூர்மையான நகங்கள். திறந்த வாயிலில் கோரைப் பற்கள்! தென்புற வரிசையில் உள்ள முதலாவது நான்காவது தூண்களைத் தாங்கியுள்ள சிங்கங்கள் துதிக்கையுடன் யாளி போல் காட்சி தருகின்றன. வடபுறச் சிங்கங்கள் தென்திசை பார்த்தும், தென்திசைச் சிங்கங்கள் வடபுறம்பார்த்தும் அமர, மேற்குச் சிங்கங்கள் கிழக்கிலும், கிழக்குச் சிங்கங்கள் மேற்கிலும் நோட்டமிட்டபடி காட்சித் தருகின்ற அழகு பார்த்தாலே உணர முடியும். இருளில் மூழ்கியிருக்கும் இந்த மகாமண்டபத்தில் ஒலிஒளிக்காட்சி நடத்தினால் எப்படியிருக்குமென மனம் எண்ணிப் பார்த்தது! அத்தனைச் சிங்கங்களும் உயிர்பெற்று உலாவத்தொடங்கி,பார்ப்பவர் நெஞ்சில் பரவசம் கலந்த அச்ச உணர்வைத் தோற்றுவிக்கக் கூடிய அந்த உன்னத நிகழ்வு தமிழகத்தில் நடக்கக் கூடிய ஒன்று! கற்பனையில் கண்டதுடன் மகிழ்ச்சி மாய்ந்து போனது!

(தொடரும்)

சிறுத்தொண்டர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 7—8—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

திருக்கோயில் மணியோசை மனத்திற்கு இதமாய் இருந்தது. மணி 9-30. இன்று முதல் ஞாயிறு அல்லவா? 10-00 மணிக்குத் திருமடம் செல்லவேண்டுமே! மனம்பறந்தது; உடல் ஒத்துழைத்தது. நேரே தருமைத் திருக்கோயில்கட்குச் சென்றேன். திருச்சுற்றில் வலம் வந்தேன்; வணங்கினேன். ஆதீனத் திருமடம் அடைந்தேன். மதுரை, திருச்சி மற்றும் பல தலங்களிலிருந்தும் அன்பர்கள் அங்கே குழுமியிருந்தனர். மணி சரியாகப் பத்து; அழைப்புக் கிடைத்தது. பண்டாரக்கட்டினுள் பணிவுடனும், பக்தியுடனும் நுழைந்தோம்; குருமணிகளைத் தரிசித்தோம்.

குருமணிகள் சித்திராசனத்தில் அமர்ந்து அன்பர்கட்குத் திருநீற்றுப் பிரசாதம் வழங்கினார்கள். திருவடிபோற்றி, வணங்கிப் பெற்று, அணிந்துமகிழ்ந்து அன்பர்கள் அமர்ந்தார்கள். திருமுறைப் பாராயணம் – நாமாவளி – நிறைந்தது. பாண்டிச்சேரி, பிரஞ்சு இந்தியப் பண்பாட்டுக்கழக ஆய்வாளர் திரு. ஆர். சுப்பிரமணியம், வேதத்தில் வைணவம் பற்றிக் கட்டுரை படித்து நிறைவித்தார்.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள். முதலில் மாதச் சிறப்பு நாட்கள் பற்றி அருளினார்கள்.

" செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டர்க்கு அடியேன் "

என்று சுந்தரர் குறித்தருளிய சிறுத்தொண்டர் வரலாற்றில் சீராளர் அவதரித்தருளியமைவரை உபதேசித்தார்கள்.

சிறுத்தொண்டர் இயற்பெயர் பரஞ்சோதியார் என்பதை முதலில் குறிப்பிட்டார்கள். சைவசமய உலகில் பரஞ்சோதியார் என மூவர் இருந்தனர். முதலாமவர் சிறுத்தொண்டர் என வழங்கப் பட்ட பரஞ்சோதியார். இவர் 7 ஆம் நூற்றாண்டினர். இரண்டா மவர் மெய்கண்டாருக்கு ஞான உபதேசம்வழங்கியருளியவராகிய பரஞ்சோதியார். இவர் பரஞ்சோதி மாமுனிகள் எனக் குறிக்கப் பெறுவர். இவர் காலம் 13 ஆம் நூற்றாண்டு. மூன்றாமவர் திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதியார். இவர் காலம் 17 ஆம் நூற்றாண்டு. இங்ஙனம் பரஞ்சோதியார் மூவர் என்பதை திரல்பட உணர்த்தி விளக்கம் செய்தருளினார்கள்.

அடுத்து, ஏழாம் நூற்றாண்டினராகிய பரஞ்சோதியார் (சிறுத் தொண்டர்) அவதரித்த குலம் பற்றிச் சிலகுறிப்புக்களைப் புலப் படுத்தினார்கள். இவர் மாமாத்திரர் குலத்தினர் எனச் சேக்கிழார் சுட்டுகிறார். மேலும் "ஆயுள் வேதக் கலையும் அலகில்வட நூற் கலையும் தூயபடைக் கலத்தொழிலும் துறை நிரம்பப்பயின்றவர்" என்று பரஞ்சோதியார் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆயுள் வேதக்கலை என்பது மருத்துவத் தொழில். மாமாத்திரர் குலம் என்பது மருத்துவர் குலம் ஆகலாம். எனவே, பரஞ்சோதியார் மயிர்வினைத் தொழில் புரியும் பரிகாரிக் குலத்தினராவர் எனக் கருதலாம் என ஆய்வுநோக்கோடு விளக்கம் அருளினார்கள்.

பரஞ்சோதியார் திருச்செங்காட்டங்குடியில் அவதரித்தவர். மருத்துவர் குலத்தில் தோன்றி மன்னர்க்குத் தளபதியாய் விளங்கி யவர். ஒருமுறை தன் அரசனுக்காக வடநாட்டிலுள்ள வாதாபி என்னும் பழைய நகரம் துகள் ஆகுமாறு போர் செய்து வெற்றி கொண்டவர். வெற்றிகொண்டு வாதாபியினின்றும் பலமணிகளையும் நிதிக்குவைகளையும் யானைகள், குதிரைகள் முதலியவற்றையும் இன்னும் வாதாபிக் கோட்டையிலிருந்து எண்ணில்லாதவற்றையும் கொணர்ந்து பல்லவன்முன் வைத்துப் புகழ்பெற்றவர்

" மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தங்கு இகலரசன் முன்கொணர்ந்தார் ",

எனச் சேக்கிழார் இதனைக் குறிப்பிடுகின்றார்.

நாவுக்கரசருக்கு இன்னலிழைத்தவன் மகேந்திரவர்மபல்லவன் இவன் மகன் முதலாம் நரசிம்மவர்மன். இவன் காலம் கி. பி. 630 - 668. இவன் படைத்தலைவர் பரஞ்சோதியார். வாதாபிப் போர் கி. பி. 640 க்கும் 643 க்கும் இடையே நடந்திருக்கவேண்டும். என்பர். வாதாபி, சளுக்கிய வேந்தனாகிய இரண்டாம் புலிகேசியின் தலைநகரம். தற்போதைய மகாராட்டிர மாநிலத்தில் பெல்கரம் மாவட்டத்தில் பாதாமி என்ற பெயருடன் விளங்குவது. போரின் விளைவாக, கோட்டை சிதைந்திருப்பதை இன்றும் காணலாம் என்பர் சிவக்கவிமணி. வாதாபியை வெற்றிகொண்ட பரஞ் சோதியார், அங்கிருந்து விநாயகரைக் கொணர்ந்து திருச் செங்காட்டங்குடி கணபதீச்சரத்தில் தாபித்தார். அவ்விநாயகர் இன்றும் வாதாபி விநாயகர் என வழங்கப்பெறுகின்றார். இங்ஙனம் வரலாற்றுக் குறிப்புக்களை உளங்கொள உணர்த்தி யருளினார்கள்.

பரஞ்சோதியார் கொணர்ந்தளித்த பொருள்கள் கண்டு மன்னன்மகிழ்ந்தான். அதிசயித்துப் பாராட்டினான். "இவர் பெரிய

சிவபக்தர்; தொண்டர். ஆதலால், இவரை எதிர்த்து வெற்றி கொள்வார் எவரும் இல்லை" எனச் சூழ்ந்துள்ளோர் கூறக்கேட்டான் அரசன்; 'சிவனடியாராகிய இவரை இங்ஙனம் ஏவினேனே' என வருந்தினன். பிழைபொறுத்தருள வேண்டினன்.

பரஞ்சோதியார் "எம் உரிமைத்தொழிலையே யாம் செய்தோம்; இதனால் தீங்கு இல்லை" எனத் தேற்றினர். அரசன் நிறைந்த செல்வத்தை அவர்க்கு அளித்துச் "சிவநெறித் திருத்தொண்டுகள் பலவற்றை நீர்விரும்பியவாறு செய்க" என வேண்டி விடை கொடுத்தான்.

வாதாபிப் போர் முடிந்து, அரசனிடம் விடை கொண்ட பின் பரஞ்சோதியார் முன் போலவே, சிவத்தொண்டு புரிந்து வந்தார். குற்ற மற்ற நற்குடிப் பிறந்த திருவெண்காட்டு நங்கை என்கின்ற அம்மையாரைத் திருமணம் புரிந்து இல் வாழ்க்கை நடத்திவந்தார். திருவெண்காட்டு நங்கை என்பது இயற்பெயரன்று. ஊரொடு சார்த்தி வழங்கும் பெயர். இங்ஙனம் வழங்கும் மரபு இந் நூற்றாண்டிலும் உளது என்பதை இடையேசுட்டி உணர்வித்தார்கள்.

பரஞ்சோதியார் சிவனடியார்களுக்குத் திருவமுது ஊட்டிப் பின்னர்த் தாம் உண்ணும் நியதி உடையவர். எண்ணற்ற அடியார் கட்கு இங்ஙனம் அமுது ஊட்டினர். அவர்கள் முன்னே தம்மை மிகவும் சிறியவராய் நினைந்து அடக்கத்துடன் ஒழுகினர். எனவே சிறுத்தொண்டர் என வழங்கப் பெற்றார்.

இங்ஙனம் ஒழுகிவரும் நாளில் 'சீராளர்' என்னும் திருமைந்தர் அவதரித்தார்.

" நீராரும் சடைமுடியார் அருளினால் நிறைதவத்துப்
பேராளர் அவர்தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவர்எனும் திருமைந்தர் அவதரித்தார் "

எனச் சேக்கிழார் இதனைக் குறித்தார். இப்பாடலின் வாயிலாகப் பல இனிய சிந்தனைகளை ஆய்வு நோக்கோடு குருமணிகள் புலப் படுத்தினர்கள்; 'மனையறத்தின்வேர்' குலமகளாம் மனைக்கிழத்தி என்பதைப் பலசான்றுகள் கொண்டு விளக்கினர்கள். 'மனையறத்தின் வேராகி' விளங்குதல் 'மனையறத்தின் வேருகி' விளங்குதல்' என்னும் 'இவற்றிடை வேறுபாடு சுட்டினர்கள். ஒருமரத்தின் முக்கியமான பகுதி அதன் வேர். ஒரு கட்டிடத்தின் முக்கியமான பகுதி அதன அஸ்திவாரம். ஓர் ஆட்சியின் முக்கியப் பகுதி அதன் செயலகம். ஒரு குடும்பத்தின் முக்கியப் பகுதியாயிருப்பவர் மனையாள். மனையை ஆள்பவர் இல்லாள். இல்லத்தை ஆள்பவர் எனவே தான் ஔவையாரும். "இல்லாள் அகத்திருக்க இல்லாத

தோன்றில்லை" என்றார். திருவள்ளுவரும் "இல்லதென் இல்லவள் மாண்பானால்" என்றார்.

இக்கருத்தை வலியுறுத்தியே சேக்கிழாரும் திருவெண்காட்டு நங்கையை மனையறத்தின் வேர் என்று குறிப்பிட்டார். வேர் மறைந்திருந்தே மரத்தை வளர்க்கிறது. அதுபோல் மனையாளும் அதாவது பெண்களும் இல்லத்திருந்தே ஆட்சி செய்யவேண்டும் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றார். ஒரு மரத்தின் கிளையையோ அல்லது மரத்தையோ வெட்டி விட்டாலும் அது மீண்டும் துளிர்த்து மரமாகும். வேரை வெட்டி விட்டாலோ வேர்ப் பகுதியில் புழு வைத்து விட்டாலோ மரம் அழிந்து விடும். இக் கருத்துப் பற்றியே பெண் ஒழுக்கத்தை அதாவது கற்பை ஆண் ஒழுக்கத்தை விட முக்கியமாகக் கருதிக்காத்து வந்துள்ளனர் தமிழ்மக்கள் என்று குறித்தது புதுமை விருந்தாகவும், தமிழர் நாகரிகத்தின் ஆணிவேரைப் புலப்படுத்தியதாகவும் அமைந்தது. அடுத்துச் 'சீராளதேவர் எனும் திருமைந்தர் அவதரித்தார்' என்னும் பகுதியின் விளக்கமாக - சேக்கிழார், திருஅவதாரம் செய்தார், அவதாரம் செய்தார், அவதரித்தார் எனக் குறித்த பகுதிகளைத் தொகுத்துச் சுட்டி வகுத்துக் காட்டினார்கள்.

"நாவில் சராசரங்களெலாம் சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார்", என ஞானசம்பந்தர் அவதாரத்தையும் "தீதகன்று உலகம் உய்யத் திருஅவதாரம் செய்தார்" எனச் சுந்தரர் அவதாரத்தையும் திருஅவதாரம் எனக் குறித்தார். "மலரும் மருள்நீக்கியார் வந்து அவதாரம் செய்தார்" எனத் திருநாவுக்கரசர் அவதரித்தமையை அவதாரம் செய்தார் எனக் குறித்தார். சீராளர் தோற்றத்தை 'அவதரித்தார்' என்றே குறித்தார். இங்ஙனம் விளக்கிச் சேக்கிழார் இங்ஙனம் குறித்துக் காட்டுதற்கும் காரணம் இருத்தல் கூடும் என்ற குறிப்பு உணர்த்தினார்கள்.

சீராளர் அவதரித்தமைவரை உபதேசம் நிகழ்ந்தது. மேற்கோள்கள், விளக்கங்கள், துணைக்கதைகள், உலகியல் நிகழ்ச்சிகள் கொண்டு இனிமையாக - உளங்கொள உபதேசித்தருளினார்கள். ஆதீனப் பண்டாரக்கட்டிற்கு வெளியே இனிய கனிச்சாறு காத்திருந்தது. கனிவுடன் அலுவலக அன்பர்கள் அளிக்கப் பருகி மகிழ்ந்தோம்; இனிய சிந்தனை உளத்தேந்தி இல்லம் ஏகினோம்.

பாக்கிழார், பரமன் புகழ் பரப்பும் திருத்தொண்டர்
சேக்கிழார் நெறிவிளக்கும் செய்யகுரு வடிபோற்றி!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு விபவ - ஆனி 16 ஆம் நாள் 16—7—88 சனிக்கிழமையன்று, தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் மணல்மேட்டை அடுத்த திருச்சிற்றம்பலத்திற்கு அருகில் அமைந்த விளத்தொட்டியில் நடைபெற்றது. இத்தலம் அப்பர் சுவாமிகள் அருளிய திருத் தாண்டகத்தில் இடம் பெற்றது. அருள்மிகு இக்ஷீரசநாயகி உடனுகிய அருள்மிகு பிரமபுரீசுவரர் இத்தலத்தில் அருட்காட்சி தருகிருர். இத்தலத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் ஆயில்யத் விழா சிறப்பாக நடைபெற்றது. 'விளத்தொட்டி தலச் சிறப்பும் தேவாரமும்' என்னும் நூல் வெளியிடப்பெற்றது. வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம், ஏ,. தலச் சிறப்புக்களை விளக்கி உரையாற்றினுர். அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக்கூட்டம் நிகழ்ந்துவருகின்றது. இம்மாதம் 86 ஆம் அருளுபதேசம் 7—8—88 அன்று, ஆதீனப் பண்டாரக்கட்டில், திருமுறைப் பண்ணிசையுடன் தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது. முதலில், பாண்டிச்சேரி ஃபிரஞ்சு இன்ஸ்டிடியூட் ஆய்வாளர், திரு. ஆர். சுப்பிரமணியன் அவர்கள் 'வேதத்தில் வைணவம்' பற்றிய ஆய்வுக்கட்டுரை வாசித்தார்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில், திருத் தொண்டர் புராணத்தின் வாயிலாகச் சைவசித்தாந்தச் செந்நெறி புகட்டும் வகையில் சிறுத்தொண்டர் புராண உபதேசம் செய்தருளி ஞர்கள். சிராளர் அவதாரம் வரை அன்று அருளிஞர்கள். சிறுத்தொண்டர், இயற்பெயர் பரஞ்சோதியார் என்பது எனக் குறிப்பிட்டுச் சைவ சமய உலகில், சிறுதொண்டர் ஆன பரஞ் சோதயார், மெய்கண்டாருக்கு உபதேசித்த பரஞ்சோதியார்,

திருவிளையாடல் புராணம் அருளிய பரஞ்சோதியார் என்னும் மூன்று அருளாளர்கள் வாழ்ந்திருந்தமையைக் காலவரயறைப்படுத்தி விளக்கினார்கள். நாயன்மார்களின் தோற்றம் பற்றிச் சேக்கிழார் குறிப்பிடுகையில் திருஅவதாரம் செய்தார், அவதாரம் செய்தார், அவதரித்தார் என அருளும்பாங்கினைச் சுட்டி விளக்கம் அருளிச் செய்தார்கள்.

ஆதீன அடியவர்களும், அன்பர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் அருளுபதேசம் கேட்டும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளைத் தரிசித்தும் பயன் பெற்றனர். அடுத்து 87 ஆம் அருளுபதேசம் 4—9—88 அன்று நிகழும். அன்பர்கள் கலந்து கொண்டு அருள்நலம் பெறுவார்களாக.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

சமயக்குரவருள் மூன்றுமவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா, விபவ - ஆடி - 7 (22—7—88) சுவாதி நாள் அன்று சிறப்பாக நடைபெற்றது. சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும் ஸ்ரீ சுந்தரருக்கும் ஏனைய சமயாசாரியர்கட்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தருமை ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் பூஜை மடத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணபடனம் நடைபெற்றது. இரவு ஸ்ரீ சுந்தரர், சேரமான்பெருமான் நாயனார் திருவீதியுலா வேத பாராயணம், திருமுறைப் பாராயணத்துடன் நடைபெற்றது. வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., புலவர் திரு. கே. கணபதி பி, லிட்., பி. எட்., ஆகியோர் அற்புத விளக்கச் சொற்பொழிவு ஆற்றினர்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் இருவேளைகளிலும் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடு ஆற்றினார்கள்.

சிதம்பரம், ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் திருமுறைக் கலாநிதி திரு. எம். கனகசபைபிள்ளை திருமுறைப்பண்ணிசை நிகழ்த்தினார். கவித்தென்றல், பிர்மஸ்ரீ உ. ர. உமாநாததீக்ஷிதர் தலைமையில் தருமை ஆதீனக் கலைக் கல்லூரிப் பேராசிரியை, வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ., எம். ஃபில். சுந்தரர் வரலாறும் வாக்கும் பற்றி உரையாற்றினர். அன்பர்கள் தரிசித்தும் விரிவுரை கேட்டும் பயனடைந்தனர்.

திருவாவடுதுறை ஆதீன உழவாரப் பணிக் குழுவினரின்

உழவாரத் திருத்தொண்டு

திருவாவடுதுறை ஆதீன உழவாரப் பணிக் குழுவினர் ஜூலை மாதம் ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளிலும், தலத்திருக்கோயில்களுக்குச் சென்று சிறப்பாக உழவாரத் திருப்பணி செய்தனர்.

3—7—88 அன்று திருப்புள்ளமங்கை (பசுபதிகோயில்) அருள்மிகு பசுபதிநாதர் திருக்கோயிலில் உழவாரப்பணி நடைபெற்றது. திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருப்பணியில் பங்கேற்றருளினார்கள்.

10—7—88 அன்று மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாத சுவாமி திருக்கோயிலில் உழவாரப்பணி நடைபெற்றது. திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ சின்ன சந்நிதானம் அவர்கள் பணியில் பங்குகொண்டார்கள்.

17—7—88 அன்று திருவாப்பாடி அருள்மிகு பாலுகந்தநாதர் திருக்கோயிலில், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள், பணியிற் பங்குகொள்ள உழவாரத் திருப்பணி நடைபெற்றது.

24—7—88 அன்று திருவாப்பாடி அருள்மிகு பாலுகந்தநாதர் திருக்கோயிலில், சூரியனார்கோயில், ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பணியிற் பங்குகொள்ள உழவாரப்பணி மேலும் நடைபெற்றது.

31—7—88 அன்று திருமீயச்சூர் இளங்கோயில் அருள்மிகு முயற்சிநாதேசுவரர் திருக்கோயிலில், திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ சின்ன சந்நிதானம் அவர்கள் பங்குகொள்ள உழவாரத் திருப்பணி நடைபெற்றது. ஸ்ரீ சின்ன சந்நிதானம்அவர்கள் திருவழுவூர் ஸ்ரீ வீரட்டானேசுவரர் திருக்கோயிலுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

அன்பர்கள், உழவாரப் பணி புரிந்தும், தரிசித்தும் பயன் பல பெற்றனர்.

உ

குருபாதம்

தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவு

சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரி,

இளம்புலவர் தேர்வு முடிவுகள் - 1987 - 1988

தேர்ச்சி விழுக்காடு

	கலந்துகொண்டவர்கள்	வெற்றிபெற்றவர்கள்	விழுக்காடு
மயிலாடுதுறை	42	42	100%
சிதம்பரம்	18	16	88%
சென்னை	29	25	86%
திருச்சி	16	16	100%
மதுரை	26	25	96%
பாளையங்கோட்டை	18	18	100%
காரைக்கால்	29	29	100%
	178	171	

மொத்தம் எழுதியவர்கள் 178

மொத்தம் வெற்றிபெற்றவர்கள் 171

மொத்தம் விழுக்காடு 96%

7 மையங்களிலும் அதிக மதிப்பெண் பெற்றுள்ளவர்கள்

முதல் இடம்

திரு. தெ. இராஜாமணி, மயிலாடுதுறை மையம்.

இரண்டாம் இடம்

செல்வி. தா. ரா. சாந்தி, மயிலாடுதுறை மையம்.

மூன்றும் இடம்

திரு. எஸ். முத்துக்கிருஷ்ணன்
மயிலாடுதுறை மையம்

திரு. சா. குருமார்க்கண்டன்
திருச்சி மையம்

ஒவ்வொரு மையத்திலும் முதல், இரண்டாம், மூன்றும் இடம் பெற்றுள்ளவர்கள் விபரம்

மயிலாடுதுறை மையம்

முதலிடம்
1. திரு. தெ. இராஜாமணி
இரண்டாமிடம்
2. செல்வி. தா. ரா. சாந்தி
மூன்றுமிடம்
3. திரு.எஸ்.முத்துக்கிருஷ்ணன்

சிதம்பரம் மையம்

முதலிடம்
1. இரா. கலைமகள்
இரண்டாமிடம்
2. திரு. பி. சுப்பிரமணியன்
மூன்றுமிடம்
3. திரு. கே. புருஷோத்தமன்

சென்னை மையம்

முதலிடம்
1. திரு. இரா. பாஸ்கரன்
இரண்டாமிடம்
2. திரு. சோ. அண்ணாமலை
மூன்றுமிடம்
3. திரு. ஆ. திருநாவுக்கரசு

திருச்சி மையம்

முதலிடம்
1. திரு. சா. குருமார்க்கண்டன்
இரண்டாமிடம்
2. திரு. அ. சொ. சுப்பையா
மூன்றுமிடம்
3. திரு. கு. சுப்பிரமணியன்

மதுரை மையம்

முதலிடம்
1. ரா. தேவகி
இரண்டாமிடம்
2. திரு. எம். இளங்கோவன்
மூன்றுமிடம்
3. எஸ். சந்திரா

பாளையங்கோட்டை மையம்

முதலிடம்
1. திரு. இரா. கிருஷ்ணன்
இரண்டாமிடம்
2. ம. மதிமணி
மூன்றுமிடம்
3. திரு. பி. சுப்பிரமணியன்

காரைக்கால் மையம்

முதலிடம்
1. திரு. பி. ஆறுமுகம்
இரண்டாமிடம்
2. திரு. அரு. சச்சிதானந்தம்
மூன்றுமிடம்
3. திரு. ம. தம்பிதுரை

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(விபவஹூ ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)
(17—8—88 முதல் 16—9—88 முடிய)

விபவஹூ ஆடிமீ 32உ மங்களவாரம் ஹஸ்த நக்ஷத்திரம் பத்திரை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 41 நாழிகை 14 விநாடிக்கு மேஷலக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் உலகம் உய்யும் பொருட்டு, கடகராசியிலிருந்து சிம்மராசி சங்கிரமணமாக ஆவணிமாதப் பிரவேசம் செய்தருளு கின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலம். மறுதினம் ஆவணி மாதம் முதல் தேதியாகும். சங்கிரமண வாராதிபதி செவ்வாய் பகவான் சேனாதிபதியாகிறார். சங்கிரமண கால கிரகஸ்திதியினால் உலகைக் காப்பாற்றுவார். சேனைகள் எல்லைப் பாதுகாவலர் அமைதி நிலைநாட்டுவார்கள். இராஜபக்தியில் சேவைசெய்வார்கள். ஆன்றோர்களால் எங்கும் தெய்வபுண்ணிய காரியங்கள் தர்மங்கள், ஜீவகாருண்யரட்சகம் பலவாக ஏற்படும். மக்கள் க்ஷேமமுறுவர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவபரம் பொருளைப் பூசிக்கின்ற பரமாசாரிய சுவாமிகளாக வந்து சிவராஜ யோகத்தில் திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குருமகான்கள் உலகத்துக்குச் சிவ பரம்பொருளின் மகத்துவம் விளம்பியருள்வார்கள். சிஷ்யகோடிகள் சிவநேய செல்வர்களுக்குச் சிவபுண்ணியமாக, சிவத்தொண்டின் வகையினை எடுத்தியம்பி உயர்கிரியைகளில் சிறந்தோங்க ஆசீர்வதிப்பார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலபூஜைகள் சாஸ்திரோர்த்தமாக, சிவாசார நியம விதிகளின்படி பக்தியில் விசேஷ பூசைகள், விக்னேஸ்வரருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். உலகத்தில் சுபிட்சம் நிலவும்.

சூரியகிரஹணம்

குறிப்பு:— விபவஹூ ஆவணிமீ 26உ (11—9—88) ஞாயிற்றுக்கிழமை அமாவாசை பூரநக்ஷத்தில் சம்பவிக்கின்ற கேது கிரஸ்த தூரம்வர்ணம், பார்சுவ சூரியகிரகணம், சூரியோபராக புண்ணிய காலம்இது. இந்தியன் ஸ்டாண்டர்டு மணியில்,

	ஸ்பர்சம்	மத்தியம்	மோக்ஷம்	பரிமாணம்
	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.
அலகாபாத்	7—41 காலே	8—29 காலே	9—20 காலே	0—82
பெங்களூர்	7—21 காலே	8—23 காலே	10—01 காலே	0—55
சென்னை	7—33 காலே	8—38 காலே	10—04 காலே	0—53
மதுரை	7—22 காலே	8—40 காலே	10—10 காலே	0—64

இவ்வித காலவரையரைகளில் ஏற்படுவதாகும். கிரஹணம் விட்ட பிறகு அன்றே பிரதமை சிரார்த்தம் செய்யவேணும். மகம், பூரம், உத்திரம் முதல்பாதம், பூராடம், பரணி நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்தி செய்து கொள்க.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனக நடக்கும். பணவருமானம் மதிப்பாக வரும். பூமி இயந்திர சாதனங்களில் செலவும் இருந்துவரும். வெளுமை வஸ்துவின் பிராப்தியளிக்கும். புதிய வாகனம் செப்டம்பர் முதலில் தரும். காரியங்கள் மெதுவாக நடப்பதாயினும் சாஸ்திரோக்தமானதாக அல்லது நிரந்தரமான தாக ஏற்படச் செய்யும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் நல்ல விதமாக நடந்துவரும். ஆகஸ்டு 20, 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பணவருமானம் நல்லவகையில் வந்துசேரும். கீர்த்தி கௌரவம் உண்டு பண்ணும். அரசாங்க காரியங்கள் நல்லவிதமாக நடந்துகொண்டிருக்கும். பூமி கட்டிட பிராப்தியில் நாகரிகப் பொருள் அனுபோகத்தில் பயன் உண்டு பண்ணும். முன்னேடி அலுவல்கள் பல நடந்து கொண்டிருக்கும். தாரபுத்திரர்களுக்குச் சௌகரியம்தரும். ஆகஸ்டு 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பணம் வெகுவாக வந்துகொண்டிருக்கும். பொன்மணி பூஷணம் அளிக்கும். பூமி இயந்திரங்களில் விருத்திபலனை ஏற்படுத்தும். ஆகஸ்டு 23உ ஆனல் புதிய வீடுபிராப்தி, வாகன பிராப்தியளிக்கும். எல்லாக் காரியங்களும் கெடியாக நடந்துவரும். தாரபுத்திரர் களின் நலம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனக நடக்கும். பணவருமானம் வந்துசேரும். வித்துவத்துவம், கலைத்துறையில் பிரக்யாதி

யாக இருந்துவரும். ஸ்ரீ விநாயகப் பெருமானின் அருளினுல் எல்லா நன்மைகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஆகஸ்டு 31 இல் நல்ல வாகனமும் கட்டிட பிராப்தியில் நல்லனவும் ஏற்படும். எல்லாக் காரியங்களும் இராஜ கெடியில் வெற்றிகரமாக நடந்துவரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 27, 28 இத் தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பணவருமானம் கணிசமாக வரும். ஆகஸ்டு 24ᵤ முதல் இஷ்ட சித்தியும் குடும்ப நலன்களும் ஏற்படச் செய்யும். இல்லத்தில் சுபவிசேஷம் நடக்கும். நல்லவர் சான்ருேர்கள் வருகை தருவர். மனமகிழ்ச்சி ஏற்படும். இடையில் கால்களுக்குப் போன்ற சிறுநலிவு ஏற்படினும் உடன் குணமாகும். தாரபுத்திரர்களுக்கு நல்ல உற்சாகமும் சுபமும் தரும். ஆகஸ்டு 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அவசிய செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். செப்டம்பர் 2 தேதி ஆனுல் சொந்த மனை வாங்குதல் போன்றவற்றில் நல்லன ஏற்படச் செய்யும். மனுேதிடத்தினுல் எல்லாக் காரியங்களையும் வெற்றிகரமாகச் செய்யும். நல்லோர் பிரபலஸ்தர்கள் அனுகூலம் செய்வார்கள். தாரசௌக்கியம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஆகஸ்டு 31 செப்டம்பர் 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஓர் பொதுவுடமை நிர்வகித்தல் ஆகும். நேர்மை, கடமைப்பணி, சாஸ்திர நியமம் இப்போதனையில் பின்பற்றுவோருக்குச் சற்றே மனக்கசப்பாக இருப்பினும் பின் நலமனுபவித்தலினின்றும் போற்றுவர். வியாஜ்ஜியம் வழக்குகளில் ஜெயபிராப்தியாகும். மனைவி மைந்தர்களின் நலம் நன்ருக இருந்துவரும். பூமியில் விருத்தி பலன் தரும். செப்டம்பர் 2, 3, 4 தேதிகள்சந்திராஷ்டமம். புதன், வியாழன்சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் நல்ல விதத்தில் வந்துசேரும். வித்துவத்துவம், கலைத் துறையில் உத்தியோகத்தில் பிரக்தியாதியும் பதவியில் உயர்வும் அளிக்கும். ஆகஸ்டு 22 தேதிக்குள் அரசாங்கத்திலிருந்து நற் செய்திவரும். புத்திரர்களின் கல்வி கலையில் பிரகாசம் தரும்.

செப்டம்பர் முதலில் ஓர் பெரும்பொருள் கைக்கு வரும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தானதருமத்துடன் நடந்துகொண்டிருக்கும். செப்டம்பர் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ½

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். செப்டம்பர் முதலில் அதிர்ஷ்டவசமாக ஓர் பொருள்வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் ஜீவனோபாயம் தொழில்களில் உத்தியோகம் ஆகியவற்றில் முன்னேற்றமும் கியாதியும் ஏற்படும். பிரபலஸ்தர் அனுகூலம் செய்வார்கள். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். அதிக செலவினங்களும் ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்க நன்மையை உண்டுபண்ணும். நெருக்கடி பிரச்சினைகளில் நல்லோர் பிரபலஸ்தர்களின் உதவியை உண்டுபண்ணும். மனோதிடத்திலே எல்லாக்காரியங்களையும் செய்து முடிக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 9, 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் நல்ல வகையில் வரவாகிக் கொண்டிருக்கும். அவசிய செலவினங்களும் ஆகும். சிலசந்தர்ப்பங்களில் அவசரவார்த்தைகள் பிரயோகம் செய்யும். காரியங்களில் தயக்கம் ஏற்படச் செய்யும். ஆகஸ்டு 23உ ஆனால் அரசுத்தொடர்பு விஷயத்தில் நன்மை தரும். நல்லோர் பிரபலஸ்தர் நன்மை செய்வர். புத்திரருக்கு முயற்சியில் நன்மை உண்டாகும். தாம்பத்திய வாழ்வில் கிலேசம் நீங்கி, சௌகரியம் தரும். ஆகஸ்டு 17, செப்டம்பர் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் அரசாங்கப்புகழ்தரும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். பரோபகார நற்பணியில் உறுதிப்படி நடந்துவரும். எல்லாப் பிரயத்தனங்களிலும் நீடித்த நன்மை உடையதாகச் சித்திக்கும். ஆகஸ்டு 18, 19 செப்டம்பர் 14, 15, 16 இத்தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-IV

பாடம் - 7.

பண்டார சாத்திரங்கள் :

சொக்கநாதக்கலித்துறை, பண்டாரக்கலித்துறை, நவரத்தினமாலை

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன்

தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய நூல்கள் எட்டு. அவற்றில் சொக்கநாதக்கலித்துறை, பண்டாரக் கலித்துறை, நவரத்தினமாலை என்னும் நூல்களும் அடங்கும். ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய நூல்களுள் முதலாவது நூலாகக் கருதப்பெறுவது சொக்கநாதக்கலித்துறை என்பது ஆகும். 'பண்டாரக்கலித்துறை' என்பது 'ஞானப்பிரகாசமாலை' என்றும் வழங்கப் பெறுவதுண்டு. சொக்கநாதக்கலித்துறை என்பது சிவ தோத்திர நூல். பண்டாரக்கலித்துறை குருதோத்திரநூல். நவரத்தினமாலை என்பது குருமூர்த்திகள் பரிபூர்ணம் எய்திய பொழுது வருந்திப்பாடியநூல். இனி இவைகுறித்துத் தனித்தனியே ஈண்டுச் சிந்திக்கலாம்.

சொக்கநாதக் கலித்துறை :

இந்நூல் 11 பாடல்களால் ஆனது. சொக்கநாதப்பெருமான் மீது பாடப்பெற்றது ஆதலின் சொக்கநாதக் கலித்துறை என்னும் பெயர் பெற்றது. இதுதான் முதன் முதல் பாடியநூல் என்பதற்குச் சான்றாக ஒரு பாடல் இதில் அமைந்துள்ளது.

ஸ்ரீ குருஞானசம்பந்தர்தம் அருள் வரலாற்றில் குறிப்பிடத் தக்கது, மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் சொக்கநாதப் பெருமான் பெட்டகக் கோயிலுடன் கைவரப் பெற்றது ஆகும். இதனைக் குறிப்பிட்டு இந்நூலில் ஆசிரியர் பாடியருளுகின்றார்.

"கண்ணுக்கு இனிய பொருளாகி யேஎன் கரத்தில் வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புதமே! என்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே"

என்பது அப்பாடல். பெருமான் கண்ணுக்கு இனிய பொருளாகித் தம் கைவரப் பெற்றமையை இப்பாடலில் ஆசிரியர் வியந்து பாடியுள்ளது இந்நிகழ்ச்சிக்கு அகச்சான்றாக உள்ளது. இதன் பிறகே பெருமானின் திருவருளால் குருமுதல்வருக்கு ஒரு குருநாதர் காட்டப் பெறுகிறார். எனவே இப்பாடல் அமைந்த இந்நூலே ஆசிரியர் பாடிய நூல்களுள் முதலாவதாகக்கொள்ள இயலும்.

இந்நூலுள், 'சொக்க நாயகனே' என்று ஒன்பது பாடல்களிலும், 'மதுராபுரிப் பிஞ்ஞகனே' என்று இரண்டு பாடல்களிலும் ஆசிரியர் மகுடமாக அமைத்துப் பாடியுள்ளார்.

இந்நூல், ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம் பெற்றோர்களை விட்டுப் பிரிந்து மதுரையில் வாழ்ந்திருந்த காலத்தில் பாடியது. இளம் பிராயத்தே தம் பெற்றோர்களை நோக்கி, "நீங்கள் என் ஊனுக்குத் தானே தாய் தந்தையர்; என் உயிருக்குத் தாய் தந்தை இதோ இத்திருக்கோயிலில் இருக்கின்றார்" என்று அழுத்தமாக எடுத்துரைத்த பெருமான் இவர் ஆதலின் அதன் போக்கு இந்நூலில் தெளிவாகத் தெரிகிறது.

"ஆதாரம் இந்நிலத் துன்னையல்லால் எனக் காருளரோ
மீதான மான வெளியினைக் காட்ட விரைந்துடன் வந்(து)
ஓதாமல் ஓதி எனை வசமாக்கினை உள்ளொளியாம்
நாதா அருள்செய் மதுரா புரிச் சொக்க நாயகனே.

என்னும் பாடலில் "ஆதாரம் இந்நிலத்து உன்னை அல்லாமல் ஆருளரோ" என்று ஆசிரியர் கூறும் பாங்கு அவரின் உள்ளத் தெளிவிற்கு எடுத்துக்காட்டு.

இனி வருகிற ஒன்பதுபாடல்களிலும் திருமுறை ஆசிரியர்களின் வாக்கும் போக்கும் படிந்துள்ளமையை அறிய முடிகின்றது. எளிய சொற்களும் இனிய நடையும் குருநாதரின் பாடல்களுக்குச் சொந்தமானவை; நேர் நின்று பேசுவது போன்ற எண்ணத்தை உருவாக்கும் ஆற்றலுடையவை. தம்மின்குறைகளை அடுக்கிக்கூறிக் கொள்வதாக ஒருபாடல்.

"கல்லது நெஞ்சம்; இரும்பே இருசெவி; கண்கள் மரம்;
சொல்லுவதும் பொய்; அவமே தொழில்; துக்க சாகரமாம்
அல்லல் என் பங்கு; நின் அன்பர்பங்கு ஆனந்தமாக வைத்தாய்;
நல்லது! நல்ல மதுரா புரிச் சொக்க நாயகனே"

என்னும் இப்பாடலில், "அல்லல் என்பங்கு; அன்பர் பங்கு ஆனந்தமாக வைத்தாய் - நல்லது நல்ல மதுராபுரிச் சொக்க நாயகனே" என்னும் தொடரில் 'நல்லது' என்னும்சொல் நயமுடன் ஆளப்பட்டிருத்தலை அறியலாம்.

ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் தன்னை எங்ஙனமெல்லாம் ஆட்கொள்ள வேண்டும் என்னும் வேண்டுதலை ஒரு பாடலில் அழகுற ஆசிரியர் தெரிவிக்கின்றார். "பாடும்படியும் உன்னை நினைந்து ஏத்திப் பணிந்து எழுந்து ஆடும்படியும் ஐந்துமலங்களும் எனது உளத்திருந்து விலகி ஆற்றல் அடங்கும்படியும் நினது ஆனந்த சாகரமே மேல் என்று நான் நாளும் நாடும்படியும் செய்து அருள்! மதுராபுரிச் சொக்க நாயகனே" என்று வேண்டுகின்றார்.

"பாடும்படிசெய்; நினை நினைந்தேத்திப் பணிந்தெழுந்தே
ஆடும்படி செய்; மலம் ஐந்துமே அடியேன் உளத்தே
விடும்படி செய்; நின் ஆனந்த சாகரம் மேல் எனவே
நாடும்படி செய்; மதுராபுரிச் சொக்க நாயகனே"

என்பது அப்பாடல்.

சித்தாந்தச் செம்பொருள் ஆங்காங்கே தெளிவாக மிளிர் வதனையும் இந்நூலுள் காணலாம். ஆண்டவன் அருளின்றி யாதொன்றையும் உயிர் தன்னளவில் செய்ய ஒண்ணாது என்றும் அவரேவந்து ஆட்கொள்ளுவதையே உயிர் வேண்டத்தக்கது என்றும் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

"தாமே தரும்அவரைத் தம் வலியினால் கருதல்
ஆமே இவனார் அதற்கு"

என்று திருவருட்பயன் இதனைக் கூறும். இக்கருத்தமைய, குருநாதர் சொக்கநாதப்பெருமானிடம் வேண்டுவதைப் பாருங்கள்.

"பொய்யாம் மலமறுத்(து) என்னுளத் தானந்த பூரணத்தை
மெய்யா அளித்து விடாதிகண்டாய்; விடிலோ கெடுவேன்;
ஐயா! எனதுயிரே வினைமார்க்கத் தழுந்தி என்றும்
நையா(து) அருள்செய்; மதுரா புரிச் சொக்க நாயகனே"

மேலும் ஒருபாடலில் ஆண்டவன் இதுவரைதன்னை ஆட்கொண்ட முறைமையினையும் இனி எங்ஙனம் ஆட்கொள்ள வேண்டும் என்னும் கருத்தினையும் ஆசிரியர் அழகுறக் கூறுகின்றார்.

"அறிவைத் திருப்பி நின்பாதார விந்தம் அடையவல்ல
நெறியைக் கொடுத்து நிறுத்தினையே; நின் மலா இனி என்
பொறியைத் தவிர்த்து நின் ஆனந்த சாகர பூரணத்தைப்
பிறிவற்றிருக்க வைப்பாய் எனை ஆண்டருள் பிஞ்ஞகனே"

என்னும் பாடல் நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து ஓதவேண்டிய பாடலாகும். அறிவைத்திருப்பி ஆண்டவனின் பாதார விந்தத்தை அடையவைக்கும் இந்நூல் அனைவரும் ஓதி உய்யும் சிறப்புடையது.

பண்டாரக் கலித்துறை :

ஆண்டவன் திருக்குறிப்பால், குருஞானசம்பந்தர், தேடிக் கண்டு கொண்ட குருமூர்த்திகள் கமலை ஞானப்பிரகாசர். இப் பெருமான் மீது பாடப்பெற்ற அரிய நூலே ஞானப்பிரகாசமாலை என்னும் இந்நூலாகும். 'பண்டாரம்' என்னும் சொல்வழக்கு முன் காலத்தில் பொருள்வைப்பையும் அருள்வைப்பையும் குறிக்கும் உயரிய சொல்லாக விளங்கி வந்தது. இறைவனின் அருட் செல்வத்தைக் குறிக்கவந்த மாணிக்கவாசகர், "மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே" என்று மூலபண்டாரம் என்னும் சொல்லால் அருள்வைப்பைக் குறித்தார். ஆனால் இச் சொல் வழக்காற்றில் இதுபொழுது பொருள் திரிந்துபோயிற்று.

கல்வி கேள்விகளில் சிறந்த ஞானாசிரியர்களைக் குறித்துவந்த 'பண்டாரம்' என்னும் சொல்லை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம் ஆசிரியர் மீதுபாடப்பெற்ற இந்நூலுக்குப் பெயராக்கிப் 'பண்டாரக் கலித்துறை' என்று வழங்கினர். இந்நூல் 36 கட்டளைக்கலித்துறை களால் ஆனது. 36 தத்துவங்களை உபதேசித்த தம் ஞானாசிரியருக்கு புகழ்மாலை சூட்ட வந்த ஆசிரியர் 36 பாடல்களில் செய்திருப்பது எண்ணி மகிழத்தக்கது.

குருபக்தி எங்ஙனம் இருக்கவேண்டும் என்பதற்குக் குருஞான சம்பந்தர் தாம் வாழ்ந்ததோடன்றி இந்நூலுள் ஓதியும் காட்டி யுள்ளார். தம் ஞானாசிரியரை, 'ஞானப்பிரகாசன்' 'ஞானப்பிரகாச தேசன்' 'ஞானப்பிரகாசசிவன்' 'ஞானப்பிரகாச ஆண்டவன்' 'ஞானப் பிரகாச மகிபன்' 'ஞானப்பிரகாச பரமன்' 'ஞானப்பிரகாச தேசிகன்' 'ஞானப்பிரகாச எழிற்குரு' என்றெல்லாம் எடுத்துப் போற்றி யிருப்பதே அதற்குச் சான்று பகர்வனவாம். 'குருவே சிவன் எனக் கூறினன் நந்தி' என்னும் திருமூலரின் வாக்கிற்கிணங்க இத்தொடர் களில், 'ஞானப்பிரகாசன்' என்னும் பெயரோடு சிவன், பரமன், ஆண்டவன் என்னும் திருப்பெயர்களையும் சேர்த்து விளித்திருப்பது எண்ணத்தக்கது.

குருஞானசம்பந்தர் தம் ஞானசிரியரே தமக்கு அனைத்தும் என்று கூறவந்தவர், மிக உயர்ந்த நிலையில், மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் நான்கு உறவுகளும் எனக்கு நின்றன் பாதார விந்தமே என்று கூறியுள்ளார். ஏனெனில் இவரின் வரலாற்றில் மாதா, பிதா, என்னும் இரண்டு உறவும் சொக்கநாதப்பெருமான் சந்நிதியில் மாறி இறைவனே என்ருயிற்று என்பதும் பிறகு அப்பெருமான் காட்டியருள இந்த குருநாதரை அடைந்துய்ந் துள்ளார் என்பதும் ஆதலின் நிறைவான நிலையில் இக்குருநாதரே இவருக்கு மாதா, பிதா, குரு, தெய்வம், என்ருயிற்று என்பதிலும் ஓர் உண்மை இருக்கவே செய்கிறது. இதில் இன்னுமொரு குறிப்பு, பொதுவாக எல்லோர் வாழ்விலும் மாதா, பிதாவைக் காட்ட, பிதா குருவைக் காட்ட, குரு தெய்வத்தைக்காட்ட, இவரின் வாழ்க்கை யில், சிறப்பாக, மாதாவும் பிதாவும் தெய்வத்தைக்காட்ட தெய்வமே குருவைக் காட்ட நிகழ்ந்துள்ள நிகழ்ச்சி தனித்த நிலையுடையது என்பது எண்ண வேண்டிய ஒன்று.

" மாதா, பிதா, குரு தெய்வம் துணை என்பர் மக்கட் குன்றன்
பாதார விந்தம் அடியேற்கு அந் நான்கெனப் பற்றிடென்றே
போதார் கமலையுள் ஞானப்ரகாச புகன்றும் என்பால்
நீதான் பராமுக மானல் உரைப்பதென் நின்மலனே "

என்பது அப்பாடல். இவரின் தெளிந்த குருபக்தி, மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது அனைத்தும் நீரே என்று கூருமல் நின்றன் திருவடி மலர்களே என்று கூறியுள்ள கூற்றில் வெளிப்படுகிறது.

குருநாதரை இறைவன் என்றே கருதி வழிபட வேண்டும் என்று பலநூல்கள் வற்புறுத்திக் கூறியுள்ளன. அங்ஙனமே நினைந்து வழிபட்டு உய்ந்த அடியார்களும் பலர் வரலாற்றில் காணப்பெறுகின்றனர். குருஞானசம்பந்தர் எம் குருநாதராகிய ஞானப்பிரகாசரைச் சிவன் எனக் கருதாதவர் நரகத்தில் சென்று வாழ்வர் என்று எச்சரிக்கிருர்.

" ஒருத்தனை எண்ணில் உயிர்க் குயிரானை உணர்வுக் கெட்டாக்
கருத்தனை ஞானப் பிரகாசனைக் கமலாலயனை
நிருத்தனை அன்பர் நினைத்ததெல்லாம் தரும் நித்தனைச்சற்
குருத்தனை யீசனென் றெண்ணுர் நரகிற் குடிமக்களே "

என்பது அப்பொருளமைந்த இனிய பாடல்.

குருபக்தியிலும் சிவபக்தியிலும் அடிப்படையான தேவை ஒன்றியிருத்தலும் பிறரின் விமர்சனங்களைக் கண்டு நெஞ்சு

தடுமாறுமையுமே என்பது நிச்சயம். ஏனெனில் இந்த உலகம் நல்லது செய்வோரை நலியவைத்துப் பேசும்; அது இன்று நேற்றல்ல; என்றும் இவ்வுலக இயற்கை. அதுகண்டு துவண்டு போதலோ அல்லது தன்னுடைய வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளுதலோ கூடவே கூடாது என்பர் ஞானசிரியர்கள். இக் கருத்துக்களைக் குருமுதல்வரும் ஒரு பாடலில் வெளியிடுகின்றார். அவர் தம் வாழ்க்கையிலும் இடையூறு - ஏளனப் பேச்சு — பகை யுணர்வு ஏற்பட்ட நிலையில் நெஞ்சில் உறுதிப்பாடு கொண்டு வாழ்ந்தமையை இப்பாடல் மூலம் வெளியிடுகின்றார்.

" ஆரார் பகைக்கினும் ஆரார் நகைக்கினும் ஆவதென்ன
சீரார் கமலையுள் ஞானப்ர காசன் என் சிந்தையுள்ளே
பேராதிருந்து சிவானுபவம் தரப் பெற்றதினால்
வாராது சென்மமும் போகாது பேரின்ப வாரியுமே "

என்பது அவ் அனுபவப்பாடல்.

நல்லது இது என்று எப்பொழுது மனத்தில் தோன்றி விட்டதோ அதன்பிறகு உலகு கூறுவதை நோக்கி மாற்றிக் கொள்வது எள்ளளவும் நியாயமும் இல்லை; வளர்ச்சிக்கும் உதவாது. இதனை நெஞ்சில் கொண்டு வாழ்தல் வேண்டும். அதனால் தான் அருணகிரிநாதர் தம் கந்தர் அலங்காரத்தில்,

" பொய்யை நிந்திக்கிலேன்; உண்மை சாதிக்கிலேன் "

என்று கூறுகிறார். எனவே சைவ அன்பர்கள் பொய்யை நிந்திப்ப தோடு நின்று விடாது உண்மையைச் சாதிக்கவும் முற்படவேண்டும்.

எங்கும் என்றும் எப்பொழுதும் குருநாதரின் திருப்பெயரே தன்னை உய்விக்கும் என்னும் ஆழமான பக்தி, ஆசிரியர் குருஞான சம்பந்தரின் திருவுள்ளத்தில் இருந்தது என்பதற்கு ஒருபாடல் இந்நூலில் காணப்படுகிறது. அடிக்கடி நினைவுகூர வேண்டிய பாடல் இது.

" கிடந்தாலும் ஞானப்ர காசன் என்பேன் கிடந்தே எழுந்து
படர்ந்தாலும் ஞானப்ரகாசன் என்பேன் பசியோடு பிணி
அடர்ந்தாலும் ஞானப்ரகாசன் என்பேன் அந்த அந்தகனார்
தொடர்ந்தாலும் ஞானப்ரகாசன் என்பேன் பினைச்சொல்
இல்லையே "

என்பதுவே அப்பாடல்.

தம்குருநாதன் திருமடத்தில் வாழும் மனிதர்களேயன்றி பிற உயிர்களும் கூடச் சித்தாந்தக் கருத்துக்களைக் கூறும் என்னும் ஆசிரியரின் கூற்று எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது. சுவுளி கூட முப்பொருள்களின் உண்மையினைப் பேசும் என்கிருர்.

"................ ஞானப்ரகாசன் பயின்மடத்தில்
கெவுளி உரைக்கும் பதிபசு பாசத்தின் கேள்விகளே"

சித்தாந்தச் செந்நெறியைப் பரப்பவேண்டிய தருணம் இவர்கள் வாழ்ந்த காலம் ஆதலின் அதற்கேற்ப எந்தச் சுயலாபமும் கருதாமல் பணிபுரிந்துள்ளனர் நம் ஞானசிரியர்கள். அதனுல் குருஞானசம்பந்தர் ஒருபாடலில் ஞானப்ரகாசன் சீடர்களாக வாழ்வோர் எவரும் கருவாசலிலும், புலக் கள்வர்களின் வாசலிலும், பேதையர் வாசலிலும் செல்ல மாட்டார்கள் என்று கூறுகின்ருர்.'

"கருவாசலில் புலக்கள்வர் தம் வாசலில் கட்டரையன்
பெருவாசலில் மற்றைப் பேதையர் வாசலும் பின்செல்வரோ
மருவாசம் வீசும் மதுரேசன் சம்பந்தன் வாழ்மடத்தின்
திருவாசலில் செல்லும் செல்வர் தம் வாசலில் செல்பவரே.

என்பது அப்பாடல்.

கருவாசலில் புகாமல் இருக்க ஸ்ரீசம்பந்தன் திருமடத்தின் திருவாசலில் புக அனைவரும் முற்படுவார்களாக!

நவரத்தினமாலை :

இந்நூல் ஒன்பது திருப்பாடல்களால் ஆயினமையின் இப்பெயர் பெற்றது. தம் ஞானசிரியர் பரிபூர்ணம் எய்தியபொழுது வருந்திப் பாடிய நூல் இது என்பதற்கு இதில் பல சான்றுகள் காணக் கிடைக்கின்றன. இந்த உலக வாழ்க்கை பொய்யானது என்று எண்ணி இதனை நீத்து நீ சென்று விட்டாய்; என்னை மட்டும் இப்பவத்தில் உழலவிட்டாயே இது தகுமா? என்று கேட்கிருர்.

"மாயப் பிரபஞ்ச வாழ்க்கை பொய்யென்று மனத்திலுற்றுக்
காயத்தை நீக்கிப் பரிபூரணத்தினைக் கைக் கொடென்னைத்
தேயத்திடைக் கிடந்து துழலச் செய்தனை தீங்கு பெற
ஞாயத்தை எற்கருள் ஞானப்ர காச நவமணியே"

என்பது அப்பாடல்.

தம் குருநாதர் தம்மைக் குருவாரந்தோறும் வருக என்று ஆணையிட்டுத் தருமைக்கு அனுப்பினர் என்றும் ஒவ்வொரு குருவாரமும் வந்து தரிசித்த எனக்கு இன்று அங்ஙனம் வழிபட இயலாது போயிற்றே என்றும், எனக்கு ஆறுதலாகத் திருவாசகம் அருளிய திருவாய் ஒரு வாசகமும் அருளாது இருக்கின்றதே! பெருமானே! என்றும் நெஞ்சுருக வருந்திப் பாடுகிருர்.

" குருவாரம் தோறுமே வந்துனைப் போற்றவும் கூறிய சொற்(கு)
அருளே நிற்காயத்தை நீக்கினை யேல் அடியேன் தனக்கு
ஒருவாசகம் இன்றி என்னைப் பிரிவது உனக்கழகோ
திருவாசகம் உரை ஞானப்ர காச சிகாமணியே "

என்னும் பாடல் இந்நிகழ்ச்சிக்கு நல்ல அகச்சான்ருக விளங்குகிறது.

இந்நூலில் தம் குருநாதரை நவமணி என்றும் அருள்மணி என்றும் சிகாமணி என்றும் மகிழ்மணி என்றும் உயிர்மணி என்றும் நிதிமணி என்றும் ஆசிரியர் எண்ணி நெகிழ்ந்து போற்றுகிருர்.

நிறைவுரை :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய இம்மூன்று நூல்களும் பா அமைப்பிலும் பாட்டின்பொருள் நிலையிலும் தேர்ந்து உள்ளமையை உணரலாம். தாமும் வாழ்ந்து தம்மைச் சார்ந்தோரும் வாழ நெறி காட்டும் உத்தமராய், குருநாதர் விளங்கிய திறன் இந்நூல்களில் காணப்படுகிறது. ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைத்த பொழுது குருநாதராயும் குருவாரம்தொறும் ஓடிச் சென்று தம் குருநாதரைத் தரிசித்த பொழுது சீடராயும் விளங்கிய வரலாறு, பாடம் புகட்டும் பண்புடை வரலாருகும்.

எனவே இம்முன்று நூல்களையும் ஒருங்கே கற்போர், குருவருளை நாடி அதன்வழி திருவருளைப் பெறும் பக்குவத்தைப் பெற்று உய்வார்களாக!

ஆவணி மாதச் சிறப்பு நாட்கள்

19—8—88 வெள்ளி, வேளூர் பவித்ரோத்ஸவ ஆரம்பம்.

21—8—88 ஞாயிறு, தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கும், ஸ்ரீ தரும புரீசுவர சுவாமிக்கும் ஸம்வத்ஸராபிஷேக, தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா முதல்நாள். ஸ்ரீ குலச்சிறை நாயனர் குருபூஜை.

23—8—88 செவ்வாய், தருமை ஆதீனம் பூசை மடத்தில் விசேஷ அபிஷேக ஆராதனை. மாலை பட்டமளிப்பு விழா. தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா நிறைவுநாள். வேளூரில் ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் அபிஷேகம், புறப்பாடு. திருவையாறு சூரிய புஷ்கரணியில் தீர்த்தம். ஷை சூரிய புஷ்கரணியில் தெப்பம். ஸ்ரீ குங்குலியக்கலய நாயனர் [குருபூஜை.

25—8—88 வியாழன், பிரதோஷம். சிரவண விரதம்.

26—8—88 வெள்ளி, வரலக்ஷிமீ விரதம். ரிக் உபாகர்மா. ஓணம் பண்டிகை. ஸ்ரீ நடராசர் அபிஷேகம். வேளூர் பவித்ரோத்ஸவ பூர்த்தி. ஸ்ரீமத் அக்ஷயலிங்கத் தம்பிரான் சுவாமிகள் மாகேசுவர பூசை.

27—8—88 சனி, யஜுர் உபாகர்மா. பௌர்ணமி விரத பூசை. சர்க்கரை அபிஷேகம். ஆவணி உற்சவ ஆரம்பம்.

28—8—88 ஞாயிறு. காயத்திரி ஜெபம்.

30—8—88 செவ்வாய், சங்கடஹர சதுர்த்தி. திருபுவனம் ஸ்ரீ கம்பகரே சுவரசுவாமிக்கு ஸம்வத்ஸராபிஷேகம்.

2—9—88 வெள்ளி, கிருத்திகை விரதம். வேளூர் கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.

3—9—88 சனி, பாஞ்சராத்ர முனித்ரய ஸ்ரீ வைகானஸ ஸ்ரீ ஜெயந்தி.

4—9—88 ஞாயிறு, மயிலாடுதுறை குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஸம்வத்ஸராபிஷேகம். தருமை ஆதீனம் 14 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிக சுவாமிகள் குருபூஜை.

5—9—88 திங்கள், திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேசுவரசுவாமி ஸம்வத்ஸராபிஷேகம்; சர்வ ஏகாதசி.

6—9—88 செவ்வாய், பிரதோஷம். ஸ்ரீ விநாயகர் உற்சவ ஆரம்பம். தருமை ஆதீனம் 13 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

7—9—88 புதன், ஸ்ரீ செருத்துணை நாயனர் குருபூஜை.

8—9—88 வியாழன், ஆயில்ய விழா. ஸ்ரீ புகழ்த்துணை நாயனர், ஸ்ரீ அதிபத்த நாயனர் குருபூஜைகள்.

9—9—88 வெள்ளி, மாத சிவராத்திரி. ஸ்ரீ இளையான்குடிமாறர்]குருபூஜை.

10—9—88 சனி, சர்வ அமாவாசை.

11—9—88 ஞாயிறு, பூரணக்ராஸ கேதுக்ரஸ்த ஸூர்யோபராக புண்ய காலம். தர்பணஸ்கிரஹணம், சூரிய கிரஹணம்.

12—9—88 திங்கள், ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை. சதுர்த்தி. தருமை ஆதீனம் 5 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

15—9—88 வியாழன், சதுர்த்தி விரதம். ஸ்ரீ விநாயக சதுர்த்தி. ரிஷி பஞ்சமி. வேளூர் ஸ்ரீ வினைதீர்த்த விநாயகர் தீர்த்தம்.

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல்

(பட்டியல் 2)

1.	நடராஜ சதகம்	ரூ. 1—35
2.	ஆசௌசதீபிகை	1—75
3.	சிவஞானபோதம்	1—00
4.	சைவசமயம்	4—00
5.	அறுவகைச் சமயம்	1—50
6.	மூவலூர் தேவாரமும் தலச் சிறப்பும்	0—75
7.	ஆசாரக் கோவை	0—75
8.	உண்மை நெறி விளக்கம்	0—30
9.	நெஞ்சுவிடுதூது	0—55
10.	சிவபராக்கிரம கலிவெண்பா	0—50
11.	திருக்களிற்றுப்படியார்	0—65
12.	சமய இலக்கியம்	3—00
13.	மெய்கண்ட நூல்கள் அறிமுகம்	1—00
14.	அபிராமி அம்மை பதிகம்	0—30
15.	சைவசித்தாந்தக் கட்டளை	0—60
16.	போற்றிப்பஃறொடை, வினாவெண்பா	1—00
17.	சைவ அனுட்டான விதியும் அனுட்டான அகவலும்	0—45
18.	இருபா இருபஃது	1—10
19.	நித்யகன்ம நெறி	1—50
20.	திருஉந்தியாரும் கொடிக்கவியும்	0—75
21.	ஆலய வழிபாடு	0—75
22.	சைவசித்தாந்தம்	0—55

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :— செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்
தருமபுரம் - மயிலாடுதுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press. Dharmapuram, Mayiladuthurai 10-'-88.